24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 29 மார்கழி 09ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 25 டிசெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

பக்கங்கள்: 32
விலை: 30

# 73,000 பேர் பாதிப்பு



யாழ்ப்பாணம், டிசெம்பர் 25

வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ள இடரால் 23 ஆயிரத்து 54 குடும்பங்களைச் சேர்ந்த 73 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 26 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. 316 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது. >> 28

## வெள்ள இடர் நிலமைகளை நேரில் ஆராய்ந்தார் மத்தும

கிளிநொச்சி, டிசெ.25

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள இடர் தொடர்பில் ஆராய பொதுநிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார நேற்று நேரில் சென்றார்.

அவரது தலைமையில் வெள்ள இடர் தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில்நேற்றுக்காலை10.45மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது. >> 29

## இயற்கை இடர் இழப்பீட்டுக்கு கோரும் நிதி விடுவிக்கப்படும்

### இடர் முகாமைத்துவ அமைச்சர் கிளிநொச்சியில் தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ.25

இயற்கை இடரால் பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்காகக் கோரப்பட்ட நிதி விடுவிக்கப்படும். மக்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படும்.

இவ்வாறு பொது நிர்வாகம் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் >> 28

## யேசு பாலன் பிறப்பு...



தேவ மைந்தன் யேசு பாலனின் பிறந்தநாளை இன்று கிறிஸ்தவ மக்கள் தேவாலயங்களில் சிறப்பு ஆராதனைகளுடன் கொண்டாடினர். யாழ்ப்பாணம் புனித மரியன்னை ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளும் கூட்டுத் திருப்பலியும் நடைபெற்றது. தேவாலயங்களில் நேற்று இரவு 11.30 முதல் ஆராதனைகள் நடைபெற்றன. பெரும் திரளான கிறிஸ்தவ மக்கள் ஆராதனைகளில் பங்குகொண்டனர். (ற,21,26)

## எதிர்கட்சித் தலைவர் யார் தொடர்கின்றது குழப்பம்!

யாழ்ப்பாணம், டிசெ.25

நாட்டில் தற்போது எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பது தொடர்பில் பொதுமக்கள் மத்தியிலும், அதிகாரிகள் மத்தியிலும் குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட அரசியல் குழப்பம் கடந்த 16ஆம் திகதி தலைமை அமைச்சராக ரணில் >> 29

## வெள்ள இடர் தொடர்பாக விசாரித்தறிந்தார் மகிந்த

யாழ்ப்பாணம், டிசெ.25

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டவர்களின் தரவுகளை வழங்குங்கள் என்றும், உதவிகளை வழங்குவதற்குத் தயாராக இருங்கள் என்றும் முன்னாள் அரச தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச அந்தந்த மாவட்டச் செயலர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. >> 29

## காணாமல் ஆக்கப்பட்டோருக்காக ஜனவரி 9 இல் பெரும் போராட்டம்

### அனைவரும் இணையுங்கள் என உறவினர்கள் வேண்டுகோள்

வவுனியா, டிசெ.25

காணாமல் ஆக்கப்பட்டவர்களை விடுவிக்கவும், வெளிப்படுத்தவும் வலியுறுத்தி எதிர்வரும் 9 ஆம் திகதி பெரும் கூட்டமும், பேரணியும் நடத்தத் தீர்மானி த்துள்ளோம். அரச சார்பற்ற அமைப்புக்கள், அரசில்வாதிகள், சிவில் அமைப்புக்கள், மக்கள், பல்கலைக் கழகச் சமூகத்தினர் என அனைவரும் எமக்கு ஒத்துழைப்புத்தர வேண்டும். >> 29

## சுனாமிப் பேரவலத்தின் 14 ஆம் ஆண்டு நாளை




யாழ்ப்பாணம், டிசெ.25

ஆழிப்பேரலையின் 14ஆம் ஆண்டு நினைவு நாள் நாளை பாதிக்கப்பட்ட பகுதிகள் எங்கும் கடைப்பிடிப்படவுள்ளது. >> 29

## மாகாணத் தேர்தல் தாமதிப்பதால் தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை

### சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்கிறது

யாழ்ப்பாணம், டிசெ.25

மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பாக ஆலோசனை வழங்குவது தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

நாட்டில் உள்ள பல மாகாண சபைகளின் ஆயுள்காலம் >> 29

## பொது வேட்பாளர் என்ற பேச்சுக்கே இடமில்லை!

### அடித்துக் கூறுகிறது ஐ.தே.க.

கொழும்பு, டிசெ.25

அரச தலைவர் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவையே களமிறக்க வேண்டும் என்பது கட்சியிலுள்ள >> 29

## பெரும் கூட்டணி அமைத்து களமிறங்க ஐ.ம.சு.மு. முடிவு

கொழும்பு, டிசெ.25

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, பங்காளிக் கட்சிகளுடன் பெரும் கூட்டணி ஒன்றை அமைத்து எதிர்வரும் தேர்தல்களைச் சந்திப்பது என்று தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் >> 28

# பலா மரக்கன்று வழங்கலில் அரசியல்கட்சியின் தலையீடு!

## ஒப்புக் கொண்டனர் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், டிசெ.25

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடைபெற்ற பலா மரக்கன்று வழங்கலில் அரசியல் தலையீடு இருந்தது உண்மையே என்று யாழ்ப்பாணம் மாவட்டக் கமநல சேவைகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். யாழ்ப்பாண மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று மாவட்டச்செயலாளர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே திணைக்கள அதிகாரிகள் இந்தத் தகவலைத் தெரிவித்தனர்.**

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு 11ஆயிரம் மரக்கன்றுகள் கிடைத்துள்ளன. அதில் 6 ஆயிரம் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியவை வழங்கத் தயாராக உள்ளன என்று கமநலசேவைத்திணைக்கள அதிகாரிகள் கூட்டத்தில் தெரிவித்தனர்.

மரக் கன்றுகள் வழங்கலின்போது அரசியல் கட்சி ஒன்றின் பரிந்துரைப் பட்டியல்படி வழங்கப்படுகின்றது பத்திரிகையில் செய்தி வந்துள்ளதே?. அதில் உண்மை உள்ளதா? என்று மாவட்டச்செயலாளர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

ஆம். அவ்வாறுபட்டியல்வந்தமைஉண்மைதான். ஆனாலும் அந்தப் பட்டியல் எம்மால் ஆய்வு செய்யப்பட்டுத் தகுதியானவர்களுக்கே மரக் கன்றுகள் வழங்கப்பட்டனஎன்றுகமநலசேவைகள்திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

எந்தப் பணிகளிலும் எந்த அரசியல் தலையிட்டையும்அனுமதிக்கவேண்டாம். அவ்வாறுஇடமளித்த பின்னர் மக்கள் எழுப்பும் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாது என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

கலந்துரையாடலில்நீர்ப்பாசனத்திணைக்களவிடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

தொண்டமனாறு ஏரியில் 4 அடி நீரைத் தேக்க முடியும். ஆனால் 3 அடியே தேக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் வீதி 3 அடி உயரமாக இருப்பதே அதற்குக் காரணம். அச்சுவேலியில் சில வீதிகள் மிகத் தாழ்வாக உள்ளன. அவை வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச்சொந்தமான வீதிகள். அங்கு அணைக்கட்டும் அமைக்கப்பட வேண்டும்.

நீர் மட்டத்தை அதிகரித்தால் நன்னீர் மீன்பிடியை அதிகரிக்கலாம். நன்னீரையும் அதிகரிக்கலாம்.

வடமராட்சிகிழக்கில்22தடுப்பணைகள்உள்ளன. அவற்றில்4தடுப்பணைகளேதிருத்தப்பட்டுள்ளன. அவசரமாகத் திருத்த வேண்டிய அணையைப் பிரதேச செயலர்கள் அடையாளப்படுத்தினால் அவற்றைத் திருத்த முயற்சிக்கப்படும். நவாலி, கல்லுண்டாய், பொன்னாலைத்தடுப்பணைகள்அமைக்கும் முயற்சி அடுத்தாண்டு நடைபெறவுள்ளது என்று நீர்ப்பாசனப் பொறியிலாளர் குறிப்பிட்டார்.

அச்சுவேலிப்பிரதேசமக்கள்ஆண்டுதோறும்பாதிக்கப்பட முடியாது. அந்தப் பகுதி வீதியை உயர்த்தும் திட்டத்தை நீர்ப்பாசனத் திணைக்களம் தந்தால் அதற்கான நிதி எவ்வாறேனும் பெற்றுக் கொடுக்கப்படும். பொன்னாலைக் குளத்தின் பணிகள் தொடர்பில் கவனம்செலுத்தி விவசாயிகள், மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் குறிப்பிட்டார்.

விவசாயத்திணைக்களத்தால்இந்தஆண்டுயாழ்ப்பாணத்தில்203விவசாயக்கிணறுகள்அமைக்கப்பட்டுள்ளன. 397 நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்றும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

கடந்த மாதம் 15ஆம் திகதி ஏற்பட்ட கஜா புயலால் குடாநாட்டில்125ஏக்கர்பயிர்ச்செய்கைகள்25வீதமும், 50 ஏக்கர் வாழைச் செய்கை 50 வீதமும் அழிவடைந்துள்ளன. வன்னிப் பகுதியில் இருந்து கொண்டுவரப்படும் தேனீக்கள் தங்கி நிற்பது கிடையாது. அவற்றை உள்ளூரில் தேடுவதே உசிதமானதுஎன்றும்அதிகாரிகள்கூட்டத்தில்குறிப்பிட்டனர்.

சாவகச்சேரி, வேலணையில்சோலர்மூலம்இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்ட போதுகட்டாயம்காப்புறுதிசெய்யவேண்டும்என்று நிர்ப்பந்திக்கப்பட்டதுஎன்றுதெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறு கட்டாயப்படுத்த முடியாது என்று மாவட்டச்செயலர் கூட்டத்தில் அறிவுறுத்தினார். (ற-105)

## கடமையை ஏற்றார் ருவன் விஜேவர்தன



பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராகமீண்டும் நியமிக்கப்பட்ட ருவன் விஜேவர்தன பாதுகாப்புஅமைச்சில்நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

அமைச்சுக்கு வந்த இராஜாங்க அமைச்சரை பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெனாண்டோ தலைமையில் பாதுகாப்பு படைகளின் பிரதம அதிகாரி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, முப்படைத்தளபதிகள், பொலிஸ்மாஅதிபர்சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகள் வரவேற்றனர்.

சமயத்தலைவர்களின்ஆசிர்வாதத்துடன்சுபநேரத்தில்முதலாவதுஆவணத்தில்கையொப்பமிட்டருவன்விஜேவர்தன தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில் நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்ரமரத்ன, தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகாரஅமைச்சர்கலாநிதிஹர்ஷடிசில்வாஉட்படபலர்கலந்து கொண்டனர். (ற)

## பெரமுனஉறுப்புரிமையை பெறவில்லையாம்மகிந்த!

கொழும்பு, டிசெ.25

சிறிலங்காபொதுஜனமுன்னணியின்உறுப்புரிதிமையைப் பெற்றுக்கொள்ளவில்லைஎன்றுமுன்னாள்அரசதலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சிங்கள மொழி வார இதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்புரிமை அட்டையை ஏற்றுக் கொண்டுள்ளார் என்று வெளியான படம் தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்ததாவது:

அது உறுப்பினர் அட்டையைப் பெற்றுக் கொள்வது தொடர்பானது அல்ல. பொதுஜன முன்னணியில் இணைந்துகொள்ளும் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தபோது எடுக்கப்பட்டது. அந்த அட்டையில் எனது பெயர் அச்சிடப்படவில்லை என்பதால் நான் வைத்திருக்கும் ஆவணம் உறுப்பினர் அட்டை அல்ல. உறுப்புரிமைக்கு விண்ணப்பித்தல் மற்றும் உறுப்புரிமை வழங்குதல் என்பன இரு வேறு விடயங்களாகும்.

நான் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆயுள்க்கால உறுப்பினர். கட்சியின் மூத்த ஆலோசகராக உள்ளேன். மூத்த ஆலோசகர்கள் பக்கம் மாற மாட்டார்கள். அவர்களுக்கு ஓய்வு இல்லை - என்றார். (ற)

## பிரபாகரனின் ஆசைகளுக்கு உயிர்கொடுப்பதற்கு முயற்சி

### குற்றஞ்சாட்டுகின்றது மகிந்த அணி

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நிறைவேறாது போன ஆசைகளுக்கு உயிர்கொடுக்க மேற்கத்தேய நாடுகள் முயற்சிக்கின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறைஅகுரஸ்ஸயில்நேற்றுநடைபெற்றநிகழ்வொன்றில்கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

ரணிலின் பதவியை விடவும், சம்பந்தனின்எதிர்க்கட்சித்தலைவர்பதவியைக் காப்பாற்ற மேற்கத்தேய சக்திகள் ஒன்றிணைந்து போராடுகின்றன.

மேற்குலகம் அணிதிரண்டு, பிரபாகரனைக் காப்பாற்ற வேண்டுமெனக் கூறியபோது, அமெரிக்க விமான மற்றும் கடற்படை அதற்குத் தயாராக இருந்த போது, நாம் முல்லைத்தீவை நோக்கிப் படையெடுப்போம்எனமுதுகெலும்புடன் தீர்மானம் எடுத்தவர் மகிந்த ராஜபக்ச.

அவ்வாறான ஒரு தலைவரே நாடு தொடர்பாகச்சிந்தித்துபதவியைவிட்டுக் கொடுத்தார். நீங்கள் தேர்தல் குறித்தும், எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்தும் கேட்கலாம். இதில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. எதிர்க்கட்சித்தலைவர்பதவியிலிருந்துமாத்திரம்அல்ல. மகிந்தவை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் அகற்றவே முயற்சிக்கின்றனர்.

ஏன் இந்த வைராக்கியம்?. மகிந்த இந்த நாட்டிற்கு என்ன பாவம் செய்தார்?. அவரைநாடாளுமன்றபதவியிலிருந்து அகற்றி, சிறையில் அடைத்து, கொலை செய்து, ஓரத்தில் தூக்கிவீசும் தேவை யாருக்கு இருக்கிறது?

2009 மே 19ஆம் திகதி அதிகாலை முடிவடைந்த போரில் பிரபாகரன் எதைச் சிந்தித்தாரோ, எதனை யோசித்தாரோ அதற்கு உயிர்கொடுக்கவே இவர்கள் முயற்சிக்கின்றனர் - என்றார். (ற)

## ஆழிப் பேரலை காவிய இறுவட்டு வெளியீடு

வடமராட்சி, டிசெ.25

ஆழிப் பேரலைக் காவிய இறுவட்டுவெளியீடு நாளை புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு மருதங்கேணி பிரதேச செயலக கலாசார மத்திய நிலையத்தில்நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் கே. கனகேஸ்வரன்தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறைஅமைச்சின் செயலர் சி.சத்தியசீலன் கலந்துகொள்ளவுள்ளார். (ற-173)

## விபத்தில் படையினர் படுகாயம்

யாழ்ப்பாணம்.டிசெ.25

முல்லைத்தீவு, முள்ளியவளை வீதியில் நடந்த விபத்தில் இராணுவத்தினர் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த விபத்து நேற்று முன்தினம் நடந்துள்ளது.

முல்லைத்தீவில் இருந்து கொக்குளாய் நோக்கிப் பயணித்த இராணுவ வாகனம் தடம்புரண்டு வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. விபத்தில் காயமடைந்தவர்களில் 3 பேர் ஆண்கள் என்றும், இருவர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-105)

## காணிப்பதிவு நடவடிக்கை ஒருநாள் நடைபெறாது

யாழ்ப்பாணம்,டிசெ.25

ஆண்டு இறுதிப் பணிகளை முன்னிட்டு காணி மாவட்டப் பதிவகத்தின் பணிகள் எதிர்வரும் 31ஆம்திகதிதிங்கட் கிழமை நடைபெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்று காணி மாவட்டக் கருமபீடங்களில் விண்ணப்பங்கள் எவையும் ஏற்றுக் கொள்ளப்படாது என்றும், மறுநாள் செவ்வாய்க்கிழமை முதல் வழமை போன்று அனைத்துச் சேவைகளும் வழங்கப்படும் என்றும் யாழ்ப்பாண மாவட்டக் காணிப் பதிவாளர் ச.குணாஜினி அறிவித்துள்ளார். (ற)

## காணிப் பிணக்கு தொடர்பான கலந்துரையாடல் ஒத்திவைப்பு

வவுனியா, டிசெ.25

வவுனியாமாவட்டச்செயலகத்தில்அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேனதலைமையில் நடைபெறவிருந்த காணிப்பிணக்குகளுக்குத் தீர்வு எனும் கலந்துரையாடல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறும்என்றுஅறிவிக்கப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தால் அது பிற்போடப்பட்டுள்ளதுஎன்று மாவட்டச்செயலகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுநடைபெற்றபிரதேச செயலர்களுடனான சந்திப்பில் வவுனியா மாவட்டச் செயலர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள 4 பிரதேச செயலகங்க பிரிவுகளிலும் உள்ள காணிப் பிணக்குகள் நீண்டகாலமாகச் சீர் செய்யப்படவில்லை. காணிப்பிணக்குகளுக்குத் தீர்வுகாண்பதுதொடர்பான அரச தலைவர் தலைமையில் கலந்துரையாடல் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

அரசதலைவர்வெளிநாட்டுப் பயணம்ஒன்றைமேற்கொள்ளவுள்ளதன் காரணமாக இந்தக்கலந்துரையாடல்பிற்போடப்பட் டுள்ளது என்று தெரிய வருகின்றது. (ற-111)

# மக்கள் நலன் கருதி காயத்திரி மகா யாகம்!

## மட்டக்களப்பில் இடம்பெறவுள்ளது

மட்டக்களப்பு. டிசெ. 25

உலகமக்களின்நலன்கருதி மட்டக்களப்புபெரியஉப்போடையில் அமைந்துள்ள சிறி பேரின்ப ஞான பீடத்தில் காயத்திரி மகா யாகம் இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. காலத்தின்தேவையானமகரிஷிகளின்ஆணையின்பெயரில் உலக சேமத்துக்காக இது இடம்பெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

2019 மலர்வதை முன்னிட்டு எதிர்வரும் முதலாம் திகதிமு.ப10மணிக்குஉலக சேமத்துக்காகக் காயத்திரி மகா யாகம் ஆன்மீகக் குரு மகாயோகி எஸ்.புண்ணியரெத்தினம் சுவாமிகளின் தலைமையில் நடைபெறவுள்ளது.

பலஆண்டுகளாகஇலங்கை, மற்றும் உலக மக்கள் துன்பங்கள் வேதனைகள், இனந்தெரியாத நோய்கள், என்று பல இன்னல்களை எதிர்நோக்கிசவால்நிறைந்த வாழ்கைவாழ்ந்துவந்திருக்கிறார்கள். கலி முற்றி அதன் உச்சக் கட்டத்தில் இவ்வாறானநிகழ்வுகள்பலயுகங்களிலும் இடம்பெற்று வந்துள்ளதனை பலசமய நூல்கள், புராணங்கள் மூலமாக நம்மால் அறிய முடிகிறது. அவ்வாறான இன்னல்களைப் போக்கவென பண்டைய காலங்களில் இவ்வாறு காயத்திரி மகா யாகங்கள், வேள்விகளைச் சித்தர்கள், யோகிகள், ஞானிகள், மகரிஷிகள் நிகழ்த்தி உலகத்தில் அமைதியை நிலை நாட்டியுள்ளார்கள்.

இவ்வாறு அகஸ்தியரை மூல குருவாகக் கொண்டு அவரின் நேரடிச் சீடராக வி ருந்து யோகியான சிறி கண்ணையா யோகி மகரிஷியின் நேரடிச் சீடரான காயத்திரி சித்தர் சிறி பஹவான் ஆர்.கே. முருகேசு சுவாமிகள் பின்னர் முருகேசு சுவாமிகளின் மாணவர்மகாயோகிஎஸ்.புண்ணியரெத்தினம் சுவாமிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

வாழையடி வாழையாக வந்தகுருமார்க்கத்தில்நான்காவது தலை முறையில் சுவாமிகளின் நேரடி அருள் பார்வையில், பக்தர்களால் இந்தியாவில் இமயம் தொடக்கம் குமரி வரையுள்ள சஞ்ஜீவினி உட்பட 108 உயிர் மூலிகைகள், உலகை ஆளும் சப்த ரிஷிகள் பதினெட்டு சித்தர்களை ஆவாகனம்செய்யவென்று பதினெட்டு நிறைகுடம் வைத்துயாகபூசைஇடம்பெறஉள்ளது.

இலங்கையில் மட்டுமல்ல இனம், ஜாதி, மதம்,மொழி பேதங்களைக் கடந்து உலகின் அனைத்து மக்களின் ஏனைய ஜீவராசிகளின் நலனைக் கருத்திற் கொண்டும் அவர்களின் ஜென்ப சாபங்கள், பாவங்கள், பசிப்பிணி, நோய்ப்பிணி, வறுமை, சாக்காடு, சூனியம், தரித்திரம், என்று அனைத்து விதமானமற்றும்கிரகதோஷங்கள் பிரம்ம ராட்சசன் பீடித்திருந்தாலும் அதிலிருந்து விமோசனம் பெற செய்திடும் நோக்கில் இது நிகழ்த்தப்படவுள்ளது.

இந்த மகா யாகத்துக்கு வரும்பக்தர்களுக்குசுவாமிகள் ஆசீர்வாதம், ஆன்மீக அருள்உபதேசமும்வழங்குவார். அன்னதானமும் வழங்கப்படும். (4,46)

# குஞ்சுக்குளம் சுற்றுலா மையம் மீளஇயங்கவைக்க நடவடிக்கை

## நானாட்டான் சபைத் தவிசாளர் தெரிவிப்பு

மன்னார், டிசெ. 25

மன்னார் குஞ்சுக்குளத்தில் இயங்காமல் இருந்த தேக்கம் சுற்றுலா மையம் மீளஇயங்கவுள்ளதாகநானாட்டான்பிரதேசசபைத்தவிசாளர்தி. பரஞ்சோதிதெரிவித்தார். அதற்கான கேள்விகோரல் விரைவில் விடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.






வடக்கு மாகாண சபையின் சுற்றுலா அமைச்சு 2014ஆம் ஆண்டு12 மில்லியன் ரூபாசெலவில்குஞ்சுக்குளம்தேக்கம் பகுதியில் சுற்றுலா மையத்தை அமைத்திருந்தது. ஆனால் அதனை மேற்கொண்டுசெயற்படுத்துவதற்கான நிதி எதுவும் வழங்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது. அதனால் அதைச் செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே பிரதேச சபை அதைத் தனியாரிடம் ஐந்துவருடகுத்தகைக்குவிட்டிருந்தது. ஆனால் அது பயன்படுத்தப்படவில்லை. கட்டடங்கள், கூரைகள் கவனிப்பாரின்றிச் சேதமடைந்துவிட்டன. அந்த இடம் புற்கள் வளர்ந்து பற்றையாக் காணப்பட்டது.

இது தொடர்பில் சபைத் தவிசாளர் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் பின்னர் புதிய நிர்வாகம் சுற்றுலா மையத்தைப் பொறுப்பேற்றது. சுற்றுலா மையத்தைக் குத்தகைக்கு எடுத்தவரிடம் சுற்றுலா மையத்தைத் திறக்காமைக்கான காரணம் கேட்டபோது, சுற்றுலா மையத்துக்கென்று வசதிகள் இருக்கவில்லைஎன்றுகாரணம்கூறப்பட்டது.

இதுபற்றிச் சபை அமர்வுகளிலும் ஆராயப்பட்டது. கடந்த 19ஆம் திகதி கூட்டத் தீர்மானத்தின்படி தனியாருக்குக் கொடுத்தஒப்பந்தத்தைஇரத்துச்செய்து அடுத்தவருடம் ஜனவரி மாதமளவில் திறந்தகேள்விமூலமாகக்குஞ்சுக்குளம் சுற்றுலா மையத்தைக் குத்தகைக்கு விடத்தீர்மானித்துள்ளதாகத்தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவித்தார்.

வடக்கு மாகாணச் சுற்றுலா அமைச்சு முன்னாள்முதல்வர்சி.வி.விக்னேஸ்வரனின் பொறுப்பில் இருந்தது. அதற்கென வேறு இடங்களில் சில நடவடிக்கைகள் இடம்பெற்றபோதும் மன்னாரில் முக்கிய இடமாகக் கருதப்பட்ட தேக்கம் பகுதி சுற்றுலா மையம் இன்றுவரைகாடுமண்டியேகிடக்கிறதுஎன்று அங்குள்ளவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (4,213)

# சீருடைவவுச்சர் வழங்கல்

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் மற்றும் யாழ்ப்பாணம் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான சீருடை வவுச்சர் நாளையும், நாளைமறுதினமும் காலை 8 மணிக்கு அந்தந்தப் பாடசாலைகளில் வழங்கப்படவுள்ளன.

என்வே அனைத்து ஆரம்பப் பிரிவு மாணவர்களின் பெற்றோர்களும் வருகை தந்து தமது பிள்ளைகளின் சீருடைக்கான வவுச்சரை பெற்றுச் செல்லுமாறு இரு பாடசாலைகளின் அதிபர்களும் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஐ)

# திருவாசக முற்றோதல்

வவுனியா,டிசெ.25

திருவாசக முற்றோதல் நிகழ்வு வவுனியா கந்தசாமி ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம் பெறும்.

வவுனியா கோவிற்குளம் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தின் அறங்காவலர்களின் ஏற்பாட்டில் வவுனியாவில் உள்ள திருத்தலங்களில் திருவாசக முற்றோதல்கள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 16ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் ஜனவரி 14ஆம் திகதி வரை ஆலயங்களில் திருவாச முற்றோதல் இடம்பெறவுள்ளன. (ஐ)

# எம்.ஜி. இராமச்சந்திரனுக்கு யாழ்ப்பாணத்தில் நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,டிசெ.25

தமிழக முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய பிரபல நடிகருமான எம்.ஜி.இராமசந்திரனின் 31 ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று யாழ்பாணத்தில் கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர் சிலைக்கு, அவரது நண்பனும் தீவிர ரசிகனுமான யாழ்ப்பாண எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கம் மாலை அணிவித்து தீபம் காட்டி அஞ்சலி செலுத்தினார்.

அதனை தொடர்ந்து முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், சமூக சேவையாளர் மா. கருணாமூர்த்தி ஆகியோர் மாலை அணிவித்தனர்.



கல்வியங்காட்டில் அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆர் சிலை யாழ்ப்பாணம் எம்.ஜி.ஆர் கோப்பாய் சுந்தரலிங்கத்தின் நிதியில் அமைக்கப்பட்டது. (ஐ-37)

# கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

வவுனியா, டிசெ. 25

வவுனியா புளியங்குளம் லைகா கிராமத்தில் வசிக்கும்100மாணவர்களுக்கு ஒன்னூர் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உடல் உள நல மேம்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அதில் ஒரு அங்கமாக பாடசாலை மாணவர்க வீ 3 பவுண்டேசன் ஊடாக லண்டன் டோமஸ்வெல் பூப்பந்துவிளையாட்டுகழக உறுப்பினர்கள் அண்மையில் கற்றல் உபகரணங்களை வழங்கினர்.

அமரர் ஹரனின் நினைவு தினத்தை முன்னிட்டு அவை வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

45 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (4,222)

# ஏழ்மைநிலைக் குடும்பத்துக்கு கூரைத் தகரங்கள் வழங்கல்

வவுனியா, டிசெ. 25

மழைக்கு மத்தியிலும் துன்பங்களை அனுபவித்து வந்த 4 பிள்ளைகள் கொண்ட குடும்பத் தலைவிக்கு கூரைத் தகரங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

வவுனியாதட்சநாதன்குளம்சுடலைக்கருகில்பலவருடங்களாக அவர்கள் அல்லல்ப்பட்டு வரும் நிலையில்அவர்களுக்குஇவை வழங்கப்பட்டன.

ல்ண்டன் வாழ் அருணா அருனாச்சலம் சாந்தா ஆகியோர் அவற்றைபெற்றுக்கொடுக்கநிதி உதவி வழங்கியிருந்தனர் என்றுதெரிவிக்கப்பட்டது. (4,222)



# கிளிநொச்சியில் பாதிக்கப்பட்டோருக்கு நடமாடும் மருத்துவ சேவைகள் ஆரம்பம்

## பயன்பெற்றுக்கொள்ளுமாறு மக்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 25
கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளப்பாதிப்புக்கு இலக்காகியுள்ள மக்களுக்காக நடமாடும் மருத்துவ சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் தங்கியிருக்கும் இடைத்தங்கல் முகாம்களில் நடமாடும் மருத்துவ சேவையைப் பெறலாம். மக்கள் பயன்பெற்றுக்கொள்ளுங்கள் என்று கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் கலாநிதி சி.குமாரவேல் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது நிலவும் அசாதாரண சூழல் காரணமாகக் கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. மக்கள் தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.
அங்கே தங்கியுள்ள மக்கள் எதிர்கொள்ளும் சுகாதார நெருக்கடிகள், நோய் தடுப்பு , வர முன் காப்பு ஆகியவற்றின் கீழ் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.
சுழற்சி முறையில் மருத்துவர்கள் கொண்ட அணிகள் இதற்காக நியமிக்கப்பட்டுள்ளன. அதேவேளை நுளம்புப் பெருக்கத்தைத் தடுப்பதற்கான மருந்து விசிறும் பணிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
தற்போது முகாம்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும். அடுத்த கட்டமாக முகாம்களிலிருந்து வீடு திரும்பும் ம்க்களின் வீடுகளுக்கும் மருந்து விசிறுவதற்கான ஏற்பாடுகளும் இடம்பெறுகின்றன என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (4,105)



# 40 முதியவர்களுக்கு உதவிப் பொருள்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 25
மாங்குளம் பகுதிகளில் பாதிக்கப்பட்டிருக்கும் 40 முதியவர்களுக்கு உலர் உணவு பொருள்கள், நுளம்பு வலைகள் மற்றும் பாடசாலை மாணவிகள் இருவருக்கு ஈருருளிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.
வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் அவற்றை வழங்கியது. அவற்றின் பெறுமதி சுமார் ஒரு லட்சத்து 63 ஆயிரம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது.
அதேவேளை மாங்குளம் ஒலுமடு மகா வித்தியாலயத்தில் கற்கும் இரண்டு மாணவிகளுக்கு சுமார் 34 ஆயிரம் ரூபா பெறுமதியான ஈருருளிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (4)

# வலி. கிழக்குப் பிரதேச சபையால் உதவிப் பொருள்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 25
வெள்ளப்பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கு வழங்கவென உதவிப் பொருள்கள் சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று வலி.கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ் தெரிவித்தார்.
வன்னி மாவட்டங்களில் வெள்ளப்பாதிப்பால் குடும்பங்கள் நிர்க்கதியாகியுள்ளன. அவர்களுக்கு வலி. கிழக்குப் பகுதிகளில் உள்ளவர்கள் உதவிகளை வழங்குங்கள் என்று தவிசாளர் கேட்டுள்ளார். (4)



கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தனது ஒரு மாதக் கொடுப்பனவான 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனிடம் அதை வழங்கியுள்ளார். (4,222)

# வெள்ளம் வழிந்தோட தடைப்பட்ட கால்வாய் தூர்வாரிச் சீரமைப்பு

கொழும்பு, டிசெ. 25
முல்லைத்தீவு முள்ளியவளை கணுக்கேணி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் வெள்ளம் வழிந்தோடுவதற்கு இலகுவாகக் கால்வாய்கள் நேற்றுமுன்தினம் சீரமைக்கப்பட்டன.
கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையின் ஜே.சி.பி. இயந்திரம் மூலமாக தற்காலிக வடிகால்கள் சீரமைக்கப்பட்டன.
அதிகளவான கழிவுகள் கால்வாய்களுக்குள் கிடந்தன. குப்பைகளால்நிறைந்து கால்வாய்களே இல்லை என்பது போன்று காணப்பட்டதால் வெள்ளம் வழிந்தோடமுடியாது வீடுகளுக்குள் புகுந்தது என்று தெரிவிக்கப்பட்டது.
இது குறித்துக் கரைதுறைப் பற்றுப் பிரதேச சபைத் தவிசாளருக்கு அறிவிக்கப்பட்டது. முள்ளியவளை, வற்றாப்பளை போன்ற தாள்நிலக் கிராமங்களில் வெள்ளம் வழிந்தோடாதவாறு காணப்பட்டது. பிரதேச சபையின் உறுப்பினர்கள், ஊழியர்கள் சென்று பிரதேசத்தில் வெள்ளம் ஓடக்கூடிய வகையில் கால்வாய்களை வெட்டி வீதிகளைத் திருத்தினர். (4,ரி3)



# அகில இலங்கை இந்துமாமன்றம் உதவிப் பொருள்கள் சேர்க்கிறது

## வழங்கி உதவுமாறு கோரிக்கை


யாழ்ப்பாணம், டிசெ. 25
மழையால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ள உடன்பிறப்புக்களுக்கு அகில இலங்கை இந்துமாமன்றம், முதற்கட்ட உதவிப் பணிகளைத் தனது யாழ்ப்பாண அலுவலகத்தினூடாக சேர்க்க ஆரம்பித்துள்ளது.
உதவிப் பொருட்களாக உலர் உணவுப் பொருள்கள், உடுப்புகள் (புதியவை), போர்வை (புதியவை) உட்பட தங்களால் இயன்ற உதவிகளைப் பொருள்களாகவோ நிதியாகவோ வழங்கலாம்.
உதவிப் பொருள்களைப் பின்வரும் சேகரிப்பு நிலையங்ளில் தாமதமின்றிக் கையளிக்குமாறு கேட்டுள்ளது.
அதன்படி, கோவில் வீதி நல்லூரிலுள்ள அகில இலங்கை இந்துமாமன்ற யாழ்ப்பாணப் பணிமனை (021 222 1075) , கொழும்பு சேர் சிற்றம்பலம் ஏ.கார்டிணர் மாவத்தையிலுள்ள அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமையகம் (0112 434990), லோறன்ஸ்வீதி,பம்பலப்பிட்டியிலுள்ள இந்து வித்தியா விருத்திச் சங்கம் (சரஸ்வதிமண்டபம்) (0112 585 975), விவேகானந்த மேடு, கொழும்பிலுள்ள விவேகானந்த சபை, (0112 422 646) ஆகியவற்றில் ஒப்படைக்கலாம் என்று மன்றப் பொதுச் செயலர் வே.கந்தசாமி தெரிவித்துள்ளார். (4)

# உதவிப் பொருள்களை வழங்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 25
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு உதவுமாறு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
"கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான மக்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் மாற்று உடை இன்றி அவதிப்படுகின்றனர். அவர்களுக்கான மாற்றுஉடைகள், உதவிகள், அடுத்த சில நாள்களுக்கான அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்கள், குழந்தைகளுக்கான நுளம்புவலைகள் மற்றும் பால்மா ஆகியவற்றை வழங்குங்கள். இவற்றைச் சேகரிக்கும் பணியில் தமிழ் மக்கள் கூட்டணி ஈடுபட்டுள்ளது. விரும்புவோர் கூட்டணியைச் சேர்ந்த அருந்தவபாலன் ஊடாக அவற்றை வழங்கலாம்.
பொருள்கள் கொழும்பில் பொட்டலங்கள் ஆக்கப்பட்டு கிளிநொச்சிக்கு அனுப்பப்படவிருக்கின்றன" என்று கூட்டணியின் செய்திக் குறிப்பில் உள்ளது. (4)

# காதர் மஸ்தான் எம்.பி. பொருள்கள் அன்பளிப்பு

முல்லைத்தீவு, டிசெ. 25
முல்லைத்தீவில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் உலர் உணவுப் பொருள்களை வழங்கி வைத்தார்.



இடம்பெயர்ந்து மன்னாக்கண்டல் அரசினர் தமிழ்க் கலைவன் பாடசாலையில் தங்கியுள்ள மக்களுக்கு இரவு உணவு மற்றும் உலர் உண வுப் பொருள்களை வழங்கினார். வலைஞர்மடம் செபமாலை மாதா ஆலயத்துக்குச் சுற்றுமதில் அமைக்க அடிக்கல் நட்டார்.
அதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அவர், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரசதலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்" என்று தெரிவித்தார். (4,ரி3)

# பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு இருபது கூரை விரிப்புக்கள்

## சிவன் அறக்கட்டளை வழங்கியது

முல்லைத்தீவு, டிசெ. 25
குடியிருப்புகளுக்குத் தேவையான 20 தறப்பால்களை முல்லைத்தீவு மாவட்ட சிவன் அறக்கட்டளை அமைப்பு வழங்கியுள்ளது.
விசுவமடு வள்ளுவர்புரம் மாணிக்கபுரம் மற்றும் அதன் அயற்கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அந்தப் பகுதி மக்கள் விசுவமடு பாரதி மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.
தற்பொழுது வெள்ளம் வழிந்தோடி வருகிறது. மக்கள் திரும்பவும் தமது குடியிருப்புக்களுக்குச் செல்வதாயின் பல்வேறு சேதங்களுக்கு உள்ளாகியுள்ள அவர்களின் குடியிருப்புகள் சீர்செய்யப்படவேண்டும். அதற்காகவே கூரைவிரிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
அந்தப் பகுதிக்குரிய கிராம அலுவலரும் அபிவிருத்தி அலுவலரும் விடுத்த கோரிக்கையின்படி 20 கூரைவிரிப்புக்களை வழங்கியுள்ளோம் என்று சிவன் அறக்கட்ளையின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் ஆ.ஜோன்சன் மற்றும் த.நிரோஜ்குமார் ஆகியோர் தெரிவித்தனர். இதற்கான நிதி அனுசரணையைக் கனடா சிவன் அறக்கட்டளை நிலையம் வழங்கியது என்று மேலும் தெரிவித்தனர். (4,222)

# 10,000 ஏக்கர் நெற்செய்கை அழிவு

முல்லைத்தீவு, டிசெ. 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் மழை காரணமாக, காலபோகநெற்செய்கைமேற்கொள்ளப்பட்ட பல்லாயிரக் கணக்கான வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. சில குளங்கள் உடைப்பெடுக்கும் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றனஎன்றுமுல்லைத்தீவுமாவட்டகமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்தது.

இந்தத் திணைக்களத்தின் கீழ் காணப்படும், மொத்தம் 9ஆயிரத்து 679ஏக்கர் காலபோக நெற்பயிர்ச்செய்கைமேற்கொள்ளப்பட்டவயற் காணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. 5 குளங்கள் ஆபத்தான நிலையிலுள்ளன. ஒருநீர்ப்பாசன வாய்க்காலும் சேதமடைந்துள்ளது.

ஒலுமடுக்கமக்காரஅமைப்புக்குட்பட்ட675ஏக்கர் வயல் நிலங்களும், முள்ளியவளை கமக்கார அமைப்பின்கீழ்காணப்படும்750ஏக்கர் வயல் நிலங்கள், ஒட்டுசுட்டான் கமக்கார அமைப்பின்கீழ் ஆயிரத்து 656ஏக்கர் வயல் நிலங்கள், துணுக்காய்காமக்காரஅமைப்பின் கீழ் 700ஏக்கர் வயல் நிலங்கள், பாண்டியன் குளம் கமக்கார அமைப்பின் கீழ் 500ஏக்கர் வயல் நிலங்கள், புதுக்குடியிருப்பு கமக்கார அமைப்பின்கீழ்4ஆயிரம்ஏக்கர்வயல்நிலங்கள், உடையார்கட்டுகமக்காரஅமைப்பின்கீழ் ஆயிரம்ஏக்கர்வயல்நிலங்கள், குமுழமுனை கமக்கார அமைப்பின் கீழ் 250ஏக்கர் வயல் நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

கொக்குத்தொடுவாய் கமக்கார அமைப்பின் கீழ் காணப்பட்ட வயல் நிலங்கள் ஏற்கனவே பெய்த மழைகாரணமாக அழிவடைந்து விட்டன.

ஒலுமடு கமக்கார அமைப்பின் கீழ் காணப்படும் புலிமச்சினாதிகுளம், ஒலுமடுக்குளம், தாச்சரங்கன்குளம், முறியாக்குளம் என்பன வான் பாய்கின்றன.

ஒட்டுசுட்டான் கமக்கார அமைப்பின் கீழ் காணப்படும், அம்பகாமம்குளம்குளக்கட்டால் நீர் கசிகின்றது.

முள்ளியவளைவடக்குப்பகுதியில்நீர்ப்பாசன வாய்க்கால் ஒன்றும் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது. (4,246)

## பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை கிளிநொச்சியில் அதிகரித்துள்ளது!

### மாவட்டச் செயலகம் தெரிவிக்கிறது

கிளிநொச்சி, டிசெ. 25

கிளிநொச்சி மாவட்டத்தில் 11 ஆயிரத்து 688 குடும்பங்களைச் சேர்ந்த 38 ஆயிரத்து 534 பேர்பாதிக்கப்பட்டுள்ளனர்என்றுகிளிநொச்சிமாவட்ட இடர்முகாமைத்துவநிலையம்தெரிவிக்கின்றது.

தொடர் மழைவீழ்ச்சி மற்றும் வெள்ளப்பெருக்குக் காரணமாக மூன்று பிரதேசசெயலர் பிரிவுகளில் 11ஆயிரத்து 688 குடும்பங் களை சேர்ந்த 38ஆயிரத்து 534 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் 2 ஆயிரத்து 64 குடும்பங்களைச்சேர்ந்த 6ஆயிரத்து 882 பேர் 20 நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். ஒருவர் உயிரிழந்துள்ளார்.

7 வீடுகள் முழுமையாகவும், 221 வீடுகள்பகுதியளவிலும்சேதமடைந்துள்ளன.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் 2ஆயிரத்து 612 குடும்பங்க ளைச் சேர்ந்த 8ஆயிரத்து 706 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 390 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 250 பேர் 4 நலன்புரிநிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 7ஆயிரத்து 520 குடும்பங்களைச் சேர்ந்த 24 ஆயிரத்து 499 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் ஆயிரத்து 580 குடும்பங்களைச்சேர்ந்த 5ஆயிரத்து 327 பேர் 11 நலன்புரிநிலையங்களில் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 556 குடும்பங்களைச்சேர்ந்த 5ஆயிரத்து 329 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 4 நலன்புரிநிலையங்களில் 94 குடும்பங்க ளைச் சேர்ந்த 305 பேர் தங்கியுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,6)

## வவுனியாவிலும் அதிகரித்துள்ளது

வவுனியா, டிசெ. 25

வவுனியாவில் நேற்றுமுன்தினம் பெய்த மழை காரணமாக பாதிக்கப்பட்டமக்களின்எண்ணிக்கைஅதிகரித்துள்ளது. அதன்படி132 குடும்பங்களைச் சேர்ந்த 455 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்டச் செயலர் ஐ.எம். ஹனீபா தெரிவித்துள்ளார்.

வவுனியாவடக்குப்பகுதிகளிலேயே பாதிப்பு அதிகரித்துள்ளது. புளியங்குளம்வடக்குகிராமஅலுவலர்பிரிவில் 36 குடும்பங்களைச் சேர்ந்த 139 பேரும், கனகராயன்குளம் வடக்கு கிராமஅலுவலர்பிரிவில்5குடும்பங்களைச்சேர்ந்த 22 பேரும், நைனாமடு கிராம அலுவலர் பிரிவில் 11 குடும்பங்களைச்சேர்ந்த 31பேரும், மன்னகுளம் கிராம அலுவலர் பிரிவில்25குடும்பங்களைச்சேர்ந்த89 பேரும், மாறா இலுப்பை கிராம அலுவலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 4 பேரும், வெடிவைத்தகல் கிராம அலுவலர் பிரிவில் 18 குடும்பங்களைச்

சேர்ந்த 70 பேரும், கற்குளம் கிராம அலுவலர் பிரிவில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேரும், கனகராயன் குளம் தெற்கு கிராம அலுவலர் பிரிவில்17 குடும்பங்களைச்சேர்ந்த 52 பேருமாக 132 குடும்பங்களைச் சேர்ந்த 455 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

மழைதொடருமாயின்பாதிப்புக்கள், விவசாய அழிவுகள் ஏற்பட வாய்ப்புள்ளனஎன்றும்அவர்மேலும்தெரிவித்தார். (4,110)

## வசதியற்ற 50 மாணவர்களுக்கு பழைய மாணவர்கள் அன்பளிப்பு

வவுனியா, டிசெ. 25

வவுனியாவில் வசதியற்ற 50 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியாதமிழ்மத்தியமகாவித்தியாலயத்தில்1998ஆம்ஆண்டுக.பொ.த உயர்தரத்தில்கல்விகற்ற பழையமாணவர்களின்நம்பிக்கைநிதியம்மூலமாக இவை வழங்கப்பட்டுள்ளன.

மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மாவட்ட உதவிச் செயலர் த. கமலதாசன்தலைமையில்இடம்பெற்றஇந்தநிகழ்வில்வவுனியாமாவட்டச் செயலர் ஐ.முகமட் ஹனீபா, நம்பிக்கை நிதியத்தின் தலைவரும் மருத்துவருமான ஆர். பிரசன்னா, நம்பிக்கை நிதியத்தின் செயலர் ஆர். அமலன், மாவட்ட சிறுவர் மேம்பாட்டு அலுவலர்கள் யோ. ஜெயக்கெனடி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டிருந்தனர். தலா 3 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (4,110)

### மக்களால் தெரிவுசெய்யப்படும்

## அரசியல்வாதிகளின் குணங்கள் எவையென அறிவித்தல் பலகை!

### வவுனியா திருநாவற்குளத்தில் திறந்துவைப்பு

வவுனியா, டிசெ. 25

மக்களால்தெரிவுசெய்யப்படும்அரசியல்வாதிகள்கொண்டிருக்க வேண்டிய நற்குணாதிசயங்கள் எவையெவை என்று குறிப்பிடப்பட்ட பெயர்ப்பலகை வவுனியா திருநாவற்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.



'மார்ச்12'இயக்கத்தின்மூலம்'தூய அரசியல் பயணம்'

எனும் தொனிப்பொருளில் இது திறந்துவைக்கப்பட்டுள்ளதுஎன்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த பெயர்ப்பலகையில்

1. குற்றவியல் சார்ந்த தவறொன்றுக்காகச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டஅல்லது இடைநிறுத்தப்பட்ட சிறைத்தண்டனைக்கு உள்ளாக்கப்படாத ஒருவராக இருத்தல்.
2. இலஞ்சம்அல்லதுஊழல்தொடர்பில்குற்றவாளியாக்கப்படாதசமூக அங்கீகாரம் பெற்ற நன்னடத்தையுள்ளஒருவராக இருத்தல்வேண்டும். அதேபோலஇலஞ்சம்அல்லது ஊழல் பற்றிய சாட்டுதல்களுக்கு உள்ளானவர்கள் பற்றி விழிப்புடன் இருத்தல்வேண்டும்.
3. மதுசாரம், போதைவஸ்து, சூதாட்டம், கசினோ, விலைமாதர் விடுதி போன்ற பண ஈட்டல்கள் உட்பட நாட்டின் நல்விருப்புக்குப் பங்கம் விளைவிக்கும் வியாபார நடவடிக்கைகளில்ஈடுபட்டுவந்தவராக, ஈடுபட்டு வருபவராக இருத்தல் கூடாது.
4. இயற்கை உயிர்மூலக் கட்டமைப்பைச் சிதைத்துவிடக்கூடிய, சுற்றாடல்ரீதியாகத்தீங்குபயக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தவராக ஈடுபட்டுவருபவராக இருத்தல் கூடாது.
5. அரசியல் அதிகாரத்தை முறைகேடு செய்யாத ஒருவராக இருத்தல் வேண்டும்.
6. மக்கள் பிரதிநிதி ஆவதற்கு முன்னர் நாட்டின் பின்னடைவை ஏற்படுத்தகூடியநிதிசார்ஒப்பந்தங்களில் ஈடுபட்ட ஒருவராக அதேபோல மக்கள்பிரதிநிதி ஒருவராகஇருந்து கொண்டு தமது அரசியல் அதிகாரத்தை முறைகேடு செய்து அரசுடன் நிதிசார் ஒப்பந்தங்களில் ஈடுபட்ட ஒருவராக அல்லது அத்தகையஒப்பந்தம்ஒன்றில்பங்காளியாக இருக்கக் கூடாது.
7. வேட்புமனுக் கையளிக்கின்ற வேட்பாளர் தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேசத்தின் குடியிருப்பாளர் ஒருவராக அல்லது அந்த மக்களுடன்தொடர்புகளைக் கொண்ட ஒருவராக இருத்தல்வேண்டும். என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் சி.கேசவன் தலைமையில் நடைபெற்றஇந்தநிகழ்வில்பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ஹெட்டியாராச்சி, தேர்தல் வன்முறையைக் கண்காணிக்கும் அமைப்பின் அதிகாரி மஞ்சுள, நகரசபை உறுப்பினர்சு.காண்டீபன், திருநாவற் குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ச.ரவி, தமிழ்த் தேசிய இளைஞர்கழகத்தின் செயலர் கொர்சோன் கரிஸ், இலங்கையின் பிற மாவட்ட இளைஞர் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர். (4-110)


## கோவில் கட்ட ரூ. 5 லட்சம் ஒதுக்கீடு

மன்னார், டிசெ. 25

மன்னார் நானாட்டான் இராசமடு விநாயக ருக்குப் புதிய கோவில் அமைக்கப்படுகிறது.

இந்த விநாயகர் ஆலயம் சிறிய கொட்டிலில் அமைக்கப்பட்டுள்ளது. விநாயகருக்குப் புதிய கோவில் அமைக்க நிதி வழங்குமாறு அந்தக் கிராம மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். அதன்படி நிதி வழங்கப்பட்டது.

கிராம எழுச்சித் திட்ட நிதியில் 5 லட்சம் ரூபா அதற்கு வழங்கப்பட்டது. அந்த நிதியில் கோவில் அமைக்கும் ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று ஆலயநிர்வாகத்தினர்தெரிவித்தனர். (4,213)





வவுனியா கிளவிகுளம் பாலமோட்டையில் வசிக்கும் போரால் பாதிக்கப்பட்ட மாணவிக்கு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான ஈருருளியும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. லண்டனில் வசிக்கும் ஓமந்தை மகிழங்குளத்தைச் சேர்ந்த ஞானசேகரம் புவி தனது பிறந்தநாளை முன்னிட்டு அவற்றை வழங்கியுள்ளார். (4,222)

# சொகுசு பேருந்து - யானை மோதி இருவர் படுகாயம்; யானை சாவு

## மன்னாரிலிருந்து சென்றபோது புத்தளத்தில் அதிகாலை சம்பவம்



மன்னார், டிசெ. 25

**சொகுசு பயணிகள் பேருந்தும், யானையும் மோதுண்டதில், பேருந்தின் நடத்துநரும் சாரதியும் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். யானை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது.**

மன்னாரிலிருந்து கொழும்புக்குப் பயணித்த சொகுசு பேருந்து அநுராதபுரம்-புத்தளம் வீதியில் யானையுடன் மோதியுள்ளது. நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணியளவில் சம்பவம் இடம்பெற்றது.

சாரதியும் நடத்துநரும் படுகாயமடைந்தனர். பேருந்தின் முன்பகுதி முற்றாகச் சேதமடைந்துள்ளது. பயணிகள் சிறு காயங்களுக்கு உள்ளாகினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யானையுடன் மோதிய பேருந்து கட்டுப்பாட்டையிழந்து மரம் ஒன்றுடன் முட்டி நின்றது. பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தியதுடன் யானையை அங்கிருந்து அகற்றும் பணிகள் இடம்பெற்றன.

வன்னியில் மட்டுமன்றி ஏனைய காடுகளை அண்மித்த இடங்களிலும் முதன்மை வீதிகளில் யானைகளிலும் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் பல விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன். யானைகளும் உயிரிழந்துள்ளன. வாகனங்களும் சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன. (4,222,56)



# விரிவுரையாளருக்கு அஞ்சலி

வுவுனியா, டிசெ. 25

வவுனியா கற்குளத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் செ.போதநாயகிக்கு நேற்றுமுன்தினம் அஞ்சலி இடம் பெற்றது.

திருகோணமலை கடற்கரையில் கடந்த செப்ரெம்பர் 20 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார். கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் செந்தூரன் போதநாயகியின் 90ஆவது நினைவுநாள் வவுனியா கற்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அஞ்சலி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், அனந்தி சசிதரன், பிரதேசசபை உறுப்பினர்களான க.உத்தரியநாதன், கவிஞர் மா.ஜெகன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

விரிவுரையாளரின் உருவப் படத்துக்கு பொதுச் சுடர் ஏற்றி, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (4,110)

# கஞ்சா மாதிரியுடன் சந்தேகநபர் கைது

கிளிநொச்சி,டிசெ.25

கிளிநொச்சி மாவட்டத்தின் பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கஞ்சா விற்பனை செய்வதற்கு தயாரான நபர், விற்பனைக்கு முன்பாக மாதிரி காட்டுவதற்கு வந்த வேளை கைதாகியுள்ளார் எனப் பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

300 கிராம் கஞ்சாவினை கேவில் பகுதியில் இருந்து இயக்கச்சி நோக்கி எடுத்து வந்தவர் தொடர்பான தகவல் பொலிஸாருக்கு கிடைத்ததை அடுத்து, சந்தேக நபரை இயக்கச்சி பகுதியில் வைத்து கஞ்சாவுடன் கைது செய்துள்ளதாகவும், சந்தேக நபரிடம் விசாரணைகள் மேற்க்கொள்ளபடுவதாகவும், விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்ப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பளை பொலிஸார் தெரிவித்தனர். (6)

# தேக்குமரக் குற்றி கடத்தல்

## வாகனத்துடன் சந்தேகநபர் கைது



கிளிநொச்சி,டிசெ.25

அனுமதிப்பத்திரம் இன்றி தேக்குமரக் குற்றிகளை ஏற்றிச் சென்ற சந்தேகத்தில் வாகனத்தையும் சாரதியையும் கைது செய்துள்ளதாக பளைப் பொலிஸார் தெரிவித்தனர். கிளிநொச்சி மாவட்டத்தின் பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை பகுதியில், டிப்பர் வாகனம் ஒன்று உள் வீதியில் புதைந்திருப்பதனை அவதானித்த மக்கள், மணல் ஏற்றும் டிப்பர் என நினைத்து பொலிஸாருக்குத் தகவல்கள் வழங்கியுள்ளனர்.

பொலிஸார் வாகன சாரதியிடம் விசாரணை செய்தபோது, கற்கள் ஏற்றிசெல்வதாகவும் வாகனம் புதைந்து விட்டது எனவும் தெரிவித்துள்ளார். சந்தேகம் அடைந்த பொலிஸார் வாகனத்தை சோதனையிட்டபோது, தேக்கு மரக் குற்றிகள் அடுக்கப்பட்டுள்ளன. சாரதி கைது செய்யப்பட்டு, அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், ஒட்டுசுட்டான் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு கடத்தி சென்றதாக தெரிவித்துள்ளார்.

கடத்தப்பட்ட 3 இலட்சம் பெறுமதியான 18 மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபரை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், டிப்பர் வாகனம் மரக்குற்றிகள் ஆகியன பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் பளை பொலிஸார் தெரிவித்தனர்.

# கிளிநொச்சியில் வெள்ள இடரால்; பல்லாயிரம் ஏக்கர் வயல்கள் நாசம்

## கமக்கார அமைப்புக்களின் சம்மேளன செயலர் சிவமோகன் தெரிவிப்பு

கிளிநொச்சி, டிசெ.25

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள இடர் காரணமாக இரு குளங்களுக்கு கீழான 18 ஆயிரத்து 310 ஏக்கர் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக, இரணைமடுக் கமக்கார அமைப்புக்களின் சம்மேளன செயலர் மு. சிவமோகன் தெரிவித்துள்ளார்.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர் பெய்த கடும் மழை காரணமாக, குளங்களை அண்டிய பகுதிகள் உள்ளிட்ட தாழ்நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

இரணைமடுக்குளம் மற்றும் கல்மடுக் குளத்தின் கீழான பயிர்செய்கை நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

சில பகுதிகளில் கதிர் வெளிவந்துள்ள நிலையில்பயிர்கள் நீரினால் மூழ்கியுள்ளன.

இந்தப் பயிரின் விளைவு சப்பி தன்மையான நெல்லையே தரும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் இந்த முறை அதிகளவு பாதிப்பினை தாங்கள் எதிர்கொண்டுள்ளதாகவும், தமக்கு ஏற்கனவே சொல்லப்பட்டு பதியப்பட்டுள்ள காப்புறுதி நிதியை வழங்குமாறும், தெரிவித்தனர். இரணைமடுக் குளத்தின் கீழ் 10ஆயிரத்து 610 ஏக்கரும், கல்மடுகுளத்தின் கீழ் 7ஆயிரத்து 700 ஏக்கர் பயிர் செய்கை நிலங்களும் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக செயலர் மு.சிவமோகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் வே.ஆயகுலனிடம் கேட்டபோது "தற்போது முழுமையான தகவல்கள் கிடைக்கவில்லை. நீர் படிப்படியாக வடிந்து வருகின்றது. தகவல்கள் பெறப்பட்டு தலைமையகத்துக்கு அனுப்படுகின்றது. முழுமையான தகவல்கள் வழங்கப்பட்ட பின்னர் இழப்பீடு வழங்குவது தொடர்பாக, கலந்துரையாடி தீர்மானிக்கப் படும்" எனத் தெரிவித்தார். (6)



# சிறப்புத்தேவையுடையோருக்கெனவவுனியாவில்சங்கம் ஆரம்பிப்பு

வவுனியாவில் சிறப்புத் தேவையுடையவர்கள் சங்கம் மாவட்டச்சமூக சேவை அலுவலர் செ.சிறிநிவாசன் தலைமையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

மாவட்டத்திலுள்ள மாற்றுத் திறனாளிகளின் தேவைகள், உரிமைகள், கடமைகள், சலுகைகள் என்பனவற்றைப் பெற்றுக்கொள்வதற்கும் மாற்றுத்திறனாளிகளை வலுப்படுத்தி, அபிவிருத்தியில்ஈடுபடச்செய்வதையும்நோக்காகக் கொண்டுஇதுஉருவாக்கப்பட்டதுஎன்றுதெரிவிக்கப்பட்டது.

சங்கத் தலைவராக கு.கணநாதன், செயலராக முஹமட் அலி, பொருளாளராக ஆனந்தராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். 17 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

40க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் செட்டிகுளம், நெடுங்கேணி, வவுனியா தெற்கு, வவுனியா நகரம் போன்றநான்குபிரதேசசெயலகங்களில்இருந்தும்பங்கு கொண்டிருந்தனர். மாவட்டச்செயலக சமூக சேவை அலுவலர் க.இராஜசேகர், பிரதேச செயலக சமூக சேவை அலுவலர்கள்திருமதிபிறேமினிவிமலேந்திரன்,ந.பாலகுமார் மற்றும் அபிவிருத்தி அலுவலர்கள் கலந்து கொண்டனர். (4,222)

## ஓய்வூதியர்களுக்கு பயன்தரு மரங்கள்

அச்சுவேலி,டிசெ.25
ஓய்வூதியர்களுக்கு பயன் தரும் மரங்களை இலவசமாக கோப்பாய் பிரதேச ஓய்வூதியர் சகாய நிதியச்சங்கம் வழங்கி வருகின்றது.
மா,பலா,தேசி,ஜம்பு, நாவல் உள்ளிட்ட பயன் தரு மரங்கள் ஓய்வூதியர் சகாய நிதியச்சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன.
இதனைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் சங்கத்தின் தலைவர்,செயலாளருடன் தொடர்பு கொண்டு மரங்களை பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-11)

## கொதிநீர் ஊற்றுண்டதில் குழந்தைக்கு எரிகாயம்

சாவகச்சேரி,டிசெ.25
கொதிநீர் ஊற்றுண்டு எரிகாயங்களுக்கு இலக்கான எட்டு மாத ஆண்குழந்தை சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு பகுதியில் இடம்பெற்றது.
குழந்தையின் தாயார் கிணற்றடியில் பிள்ளையை அமர்த்திவிட்டு கொதி நீரையும் அருகில் வைத்துவிட்டு கிணற்றில் தண்ணீர் அள்ளியுள்ளார். குழந்தை கொதிநீர்ப் பாத்திரத்தை வீழ்த்தியதில் உடலில் எரிகாயம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ- 9)

## கருகம்பனை கழகத்துக்கு முதலிடம்

யாழ்ப்பாணம்,டிசெ.25
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2018 ஆண்டுக்கான கிராம சக்தி வேலைத் திட்டத்தின் கீழ் கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தின் செயற்றிட்டம் மாவட்ட ரீதியாக முதலாம் இடத்தை பெற்றுள்ளது.
இவர்களால் மேற்கொள்ளப்பட்ட 12 இலட்சம் பெறுமதியான கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்துமாயானத்துக்கான இளைப்பாறும் மண்டபமும் தண்ணீர் வசதி, சுற்றுபுற அழகுபடுத்தல் செயற்றிட்டத்தில் பிரதேச செயலக மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. (ஐ-114)

## ஆயுள்வேத மருத்துவமனை பணி தற்காலிகமாக நிறுத்தம்


வலி.மேற்கு,டிசெ.25
வாரத்தில் இரு நாள்கள் இயங்கிய நவாலி ஹேமலதா ஞாபகார்த்த ஆயுள்வேத மருத்துவமனையின் சுற்றுச்சூழல் அபிவிருத்திப் பணிகளுக்காக தற்காலிகமாக சேவை நிறுத்தப்பட்டுள்ளது.
சுற்றுச்சூழல் அபிவிருத்திப் பணிகள் நிறைவேறியதும் மீண்டும் திங்கள், வியாழன் ஆகிய இரு நாள்களில் மீண்டும் இயங்கும் என்று வலி .தென்மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் உறுப்பினருமான சி.மகேந்திரன் தெரிவித்தார்.
இந்த மருத்துவமனை 2015 ஆம் ஆண்டு வடமாகாண சுதேசிய மருத்துவத்துறையின் அனுமதியுடன் நவாலியில் உள்ள ஹேமலதா ஞபகார்த்த சனசமூக கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
வலி.தென்மேற்கு நவாலி, கட்டுடை, ஆனைக்கோட்டை, மானிப்பாய் மற்றும் அயற்கிராம மக்கள் மேற்படி ஆயுள்வேத மருத்துவமனை மூலம் நன்மை அடைந்து வந்தனர்.
ஒவ்வொரு மாதத்திலும் 240 முதல் 280 வரையான நோயாளிகள் மேற்படி ஆயுள்வேத நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ-50)

# தற்கால இடர்களை எதிர்கொண்டாயினும் தரைக்கீழ் நீர் வளத்தை பாதுகாக்க வேண்டும்

### வடக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்களம் தெரிவிப்பு

அச்சுவேலி,டிசெ.25
**தற்காலிக இடர்களை எதிர்கொண்டாயினும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் தரைக்கீழ் நீர் வளப்பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும். இயற்கை வளங்கள் மீதான அக்கறையீனம், நவீன வாழ்க்கைமுறை, கட்டுப்பாடற்ற நீர்ப்பாவனை என்பன யாழ்ப்பாணக் குடாநாட்டில் தரைக்கீழ் நீர்வளத்தைப் பாதிப்படையச் செய்துள்ளன என்று வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் யாழ்ப்பாணப் பிரிவு தெரிவித்தது.**

வடக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாக மழை பெய்துவரும் நிலையில் குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டன. இதனால் வடக்கின் 5 மாவட்டங்களிலும் 6 ஆயிரத்து 297 குடும்பங்களைச் சேர்ந்த 30 ஆயிரத்து 521 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையிலேயே நீர்ப்பாசனத் திணைக்களத்தின் யாழ்ப்பாணப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;
யாழ்ப்பாண குடாநாட்டு வளங்களில் தரைக்கீழ் நீர் மிக முக்கியமானது.
தரைக்கீழ் நீர்ப்பாதுகாப்புக்காக பல்வேறு நடவடிக்கைகளை வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொண்டு வந்தது. குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டு பிரதான நீரேரிகளான வடமராட்சி நீரேரி ,உப்பாறு நீரேரி ஆகியவற்றின் கடல்முகப்புத் தொகுப்பு கதவுகளான தொண்டடைமானாறு தடுப்புக்கதவு,அரியாலை தடுப்புக்கதவு ஆகியவற்றின் மீள் சீரமைப்பு, 34 உவர் தடுப்பணைகள்,17 வெள்ள நீர் தடுப்பணைகள் ,450க்கு மேற்பட்ட கிணறுகள், தெல்லிப்பழையில் தொடங்கி அரியாலையில் முடிவுறும் யாழ்ப்பாணத்தின் நீரேந்தும் மூலகங்களில் ஒன்றாகத் திகழும் வழுக்கையாறு திட்டச்சீரமைப்பு என மேற்கொண்டுள்ளது.
போருக்குப் பின்னரான காலப்பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும்பாலான நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள் சீரமைப்புச் செய்யப்பட்டதுடன் அவற்றைத் தொடர்ந்து பராமரித்து வருவதன்மூலம் தரைக்கீழ் நீர்வளம் மீள் நிரப்புகைக்கு பங்களிப்பு செய்யும் வகையில் இயங்கு நிலையில் பேணப்பட்டு வருகின்றன.
இந்நிலையில் தற்போது குடாநாட்டுக்கு கிடைத்திருக்கும் மழை வீழ்ச்சியின் விளைவு குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளத்தில் பெரியளவு மாற்றத்தினை எதிர்வரும் வருடங்களில் காண்பிக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இது எமக்கு மட்டுமல்ல இயற்கையை நேசிக்கின்ற அத்தனை பேருக்கும் மகிழ்ச்சியை தரக்கூடியதாக உள்ளது. தாழ்வான நிலப்பகுதிகளில் குடியிருப்பவர்கள் மற்றும் அடிப்படை வசதியீனங்களால்அவதியுறுபவர்கள் தற்காலிகமாக ஏற்பட்டிருக்கும் இவ்விடர்பாடுகளில் இருந்து விடுபடுவதற்காக குடாநாட்டின் மிகப்பெரிய சொத்தாகிய நீர் வளத்தைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் பொறிமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.
இயற்கை இடர்களால் பாதிக்கப்படும் மக்களுக்காக அனர்த்த முகாமைத்துவ நிலையம்,பிரதேச செயலகம் என்பவற்றால் வழங்கப்படும் நலன்புரிச்சேவைகளை பெற்றுக் கொண்டு தரைக்கீழ் நீர் வளப் பாதுகாப்புக்கு பொதுமக்கள் தங்களால் ஆன ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-11)



வவுனியா சிதம்பரபுர ஈழத்து பழனி முருகன் ஆலயத்துக்கான மின்சார வேலைகளுக்கென 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை ஆலய நிர்வாகசபைத் தலைவரிடம் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டது. வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவின் 2018ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்தே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## தையல் பயிற்சியில் 15 பேருக்கு சான்றிதழ்

வலி.மேற்கு,டிசெ.25
நவாலி-ஹேமலதா ஞாபகார்த்த அனுசரணையுடன் வடலியடைப்பு ஆராதனா தையல் பயிற்சி நிலையம் நடத்திய தையல் பயிற்சிநெறியில் 15 பேர் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றனர். பயிற்சி நிலைய பொறுப்பதிகாரி ஆசிரியர் திருமதி பத்மாவதி யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வலி.தென்மேற்கு பிரதேச செயலக கிராம அலுவலகர் ஜெ.அருள்ஞானானந்தன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு டிப்ளோமா தையல் பயிற்சி சான்றிதழை வழங்கி வைத்தார்.
கடந்த மூன்று வருடங்களில் ஏற்கனவே 60 பேருக்கும் மேற்பட்ட மாணவிகள் தையல் பயிற்சி டிப்ளோமாவில் தேறி சான்றிதழ் பெற்றுள்ளனர். (ஐ-50)

## வாழ்வாதார உவிகள் வழங்கல்

யாழ்ப்பாணம்,டிசெ.25
போரினால் பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.
சுதுமலையிலுள்ள 'உதவும் கரங்கள்' அமைப்பினால் கடந்த 16 ஆம் திகதி இந்த் உதவிகள் வழங்கப்பட்டன.
நாட்டில் ஏற்பட்ட போர்க்காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து வன்னியில் வாழ்ந்து வந்த மகாலிங்கம் தயாளசீலன் என்பவருக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.
இவர் வன்னியில் நடைபெற்ற இறுதிப்போரின்போது தாக்குதலுக்கு இலக்காகி முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட நிலையில் தற்பொழுது உடுப்பிட்டியில் வசித்து வருகிறார். இவருக்கு ஐந்து பிள்ளைகள் உள்ளனர்.
தொழிலின்றி, வருமானமின்றி வாழ்க்கையை நடத்த முடியாமல் திண்டாடும் இவருக்கு பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டையும் கருத்திற்கொண்டு பாடசாலை உபகரணங்கள் ,கதிரைகள்,தலையணைகள், படுக்கை விரிப்புகள், பாய்கள் மற்றும் உலர் உணவுப் பொருள்கள் உட்பட ரூபா 50 ஆயிரம் பெறுமதியான பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ-115)




## கற்றல் உபகரணங்கள் வழங்கல்


சாவகச்சேரி,டிசெ.25
சாவகச்சேரி கோயிற்குடியிருப்புப் பிரிவில் வதியும் பொருளாதார நிலையில் பின்தங்கிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி மொஹிதீன் பள்ளிவாசல் முன்றலில் நேற்றுமுன்தினம் மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.
சாவகச்சேரி முஸ்லீம் இளைஞர் சமூக முன்னேற்றக் கழகத்தின் ஏற்பாட்டில் நகர முஸ்லீம் வர்த்தகர்கள் மற்றும் நலன்விரும்பிகளின் ஒத்துழைப்புடன் இந்த கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.
பள்ளிவாசல் மௌலவி எஸ்.ஹஸன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தரம் 1 தொடக்கம் 11 வரை கற்கும் 80 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் சங்க உறுப்பினர்களால் வழங்கப்பட்டன. (ஐ-9)



அரச வங்கியின் உயர் பாதுகாப்புடனான சேமிப்பு / கடன் / அடகு / பட்டியல் செலுத்துதல் / வெளிநாட்டு பணபரிவர்த்தனை / ATM-CDM




# நெஞ்சைவிட்டகலாத 10 ஆம் ஆண்டு நினைவுகள்



## அமரர் நல்லையா தவகுலசிங்கம் (தவம்)

(முன்னாள் சீமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்
அக்ரோ இயந்திரவியல் தொழிலகம்
கோண்டாவில், மல்லாகம்)

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 25.02.1947 | 16.12.2008 |

திதி : மார்கழி சதுர்த்தி
25.12.2018

பத்தாண்டும் வந்ததப்பா பரித்விக்கின்றோம்
உங்கள் நினைவில் !
பாசத்துடனும் பரிவுடனும் எம்மை வளர்த்து
ஆளாக்கி, சுற்றத்தாரும் மற்றோரும் மகிழ்வுடன்
வாழ சேவைகள் பல செய்து தந்தை என்ற
சொல்லுக்கே இலக்கணமாய் தரணி போற்ற
வாழ்ந்த தவம் என்னும் உத்தமரே !
உங்கள் சிரித்த முகமும் சிந்தனைக் கதைகளும்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மாறாதப்பா



குடும்பத்தினர்.
நீதிமன்ற வீதி, மல்லாகம்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(CS-23603) (14.17)

# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

**பெறுகை அறிவித்தல்**

**2019 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு சேவை வழங்கலுக்கான விலைமனுக் கோரல்**

தலைவர் பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் தெற்கு பிரதேச-சபையில் 2019 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு (Cleaning Service) சேவை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிட மிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இல | சேவை | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|---|
| NP/14/41(15)/02/PC/04 | சுத்திகரிப்பு சேவை | 08 |

01. சேவை வழங்குநர்கள் சுத்திகரிப்பு சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமா-கவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 3 ஆண்டு கள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.

02. சேவை வழங்குநர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக்காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

03. சேவை வழங்குநர்கள் பெறுகை ஆவணங்களை வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 26.12.2018 ஆம் திகதி தொடக்கம் 10.01.2019 ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணி வரை மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூ 2500.00 ஐச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

04. பெறுகை ஆவணங்கள் 11.01.2019 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு "தவிசாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்" என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். பெறுகைப் பத்திரங் கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப் படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்.

05. கிடைக்கப் பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலை கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**க.தர்சன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

(N 8831)(14.17)

# இந்தோனேசியா சுனாமி சாவு எண்ணிக்கை உயர்வு

## மீண்டும் சுனாமி எச்சரிக்கை



**ஜகார்த்தா.டிசெ.25**
**இந்தோனேசியாவில்எரிமலைவெடிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட சுனாமியின் கோரத் தாண்டவத்தில்சிக்கிசாவடைந்தவர்களின் எண்ணிக்கை 281 ஆக உயர்ந்துள்ளதாக நேற்றைய பன்னாட்டுச் செய்திகள் தெரிவித்தன. அங்கு மீண்டும் சுனாமி ஏற்படும் என்கிற எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது.**

இந்தோனேசியாவின் மேற்கு ஜாவாத் தீவில் உள்ள அனாக் கிரகடாவ்என்றஎரிமலைகடந்தசனிக்கிழமை இரவு வெடித்து சிதறியது. இதனால் அந்தப் பகுதி முழுவதும் அதிர்ந்து குலுங்கியது. பின்னர் சிறிது நேரத்தில் சுந்தா ஜலசந்தி பகுதியில் இருந்து எழுந்த சுனாமி அலைகள் தெற்கு சுமத்ரா மற்றும் மேற்குஜாவாத்தீவுகளைக்கடுமையாகத் தாக்கின. சுமார் 65 அடி உயரம்வரைஎழுந்தசுனாமிஅலைகள் நூற்றுக்கணக்கான வீடுகள், கட்டடங்களைஅழித்துத்தரைமட்டமாக்கின. இந்தச் சுனாமித் தாக்குதலில் முதல் கட்டமாக 43 பேர் சாவடைந்ததாகத்தகவல்வெளியானது. சுனாமியின் வேகம் குறைந்ததும் மீட்பு பணியைத் தொடங்கியபோது ஏராளமான உடல்கள் மீட்கப்பட்டன. காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனைக்குஅனுப்பிவைக்கப்பட்டனர். நேற்று முன்தினம் மாலை நிலவரப்படி சுனாமியால் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 222 என்ற நிலையில் இருந்தது. நேற்று மாலை நிலவரப்படி சாவு எண்ணிக்கை 281 ஆக உயர்ந்துள்ளது. ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்திருப்பதால் சாவு எண்ணிக்கை மேலும் உயரும்என்றுகவலைதெரிவிக்கப்படுகிறது. இந்தோனேசியாவின் அனாக்க்ரகடோவாதீவில்எரிமலை குமுறிக்கொண்டிருப்பதால்அதுஒரு புதிய சுனாமியை உருவாக்கக்கூடும் என்று அந்தப் பகுதிக்கு அருகில் உள்ள கடலோர மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர். கடலோரப்பகுதிகளில் இருந்துஅகன்றுஉட்பகுதிகளுக்குச் செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# தலை தூக்குகின்றது 'அல் கொய்தா'

## பிரிட்டன் அமைச்சர் எச்சரிக்கை





லண்டன்.டிசெ.25
அமெரிக்காவில் இரட்டைக்கோபுரங்களின்மீது தாக்குதல் நடத்திய 'அல் கொய்தா' அமைப்பினர் மீண்டும் தலைதூக்கிப் பிரிட்டன்நாட்டுவிமானங்கள்மூலம்தாக்குதல்நடத்துவதற்குத்திட்டமிட்டுள்ளனர் என்றுள்ளார் பிரிட்டனைச் சேர்ந்த அமைச்சர் பென் வேல்லஸ். பலமிழந்தும் ஆங்காங்கே சிதறியும் இருந்த அல் கொய்தா ஆயுததாரிகள் மீண்டும் பலம்பெற்று மிகப் பெரிய தாக்குதல்களை நடத்துவதற்குத் திட்டமிட்டு வருவதாகப்பிரிட்டனின்உள்துறை அமைச்சரான அவர் கூறினார்.

பிரிட்டன் நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் விமானங்களைதாக்கிமிகப்பெரிய பேரழிவை ஏற்படுத்த அவர்கள் ஆயத்தமாகி வருகிறார்கள். நவீன ஆயுதங்கள் மூலம் பறக்கும் விமானங்களைச்சுட்டுவீழ்த்தும்தொழில்நுட்பத்தில் தற்போது கவனம் செலுத்துகின்றனர்.

புதிய யுக்திகளைப் பயன்படுத்தி ஐரோப்பாவில் விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தும் வேலைத் திட்டங்களில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்று அவர் மேலும்கூறினார். அதிநவீன இரசாயனங்கள் மூலம் நடத்தப்படவுள்ளஇந்தத்தாக்குதல்களில் இருந்து விமானங்கள் பாதிக்கப்படாமல் இருப்பது தொடர்பாக ஆராய்ச்சி செய்து அவ்வாறு நிகழாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அடையாளம் காண்பதற்காகப் பிரிட்டன் அரசு இதுவரை இரண்டரைக்கோடிபவுண்டுகளைச்செலவிட்டுள்ளதுஎனவும்பென்வேல்லஸ்தெரிவித்தார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள உலக வர்த்தக மையக் கட்டடங்கள் மீது 2001ஆம் ஆண்டில் விமானங்களை மோதி அல் கொய்தா அமைப்பினர் நடத்திய தாக்குதலில், பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர். உலக வர்த்தக மையக் கட்டடங்கள் தீப்பற்றி எரிந்தன. இந்தத் தாக்குதல்களில் எல்லாமாக2ஆயிரத்து973பேர் கொல்லப்பட்டனர்.


இதன்பின்னர்'அல்கொய்தா' அமைப்பின்தலைவர்ஒசாமா பின்லேடனைப் பாகிஸ்தானில் வைத்து அமெரிக்கப் படையினர் சுட்டுக் கொன்றனர். அவரைக் கொன்ற பின்னர்அல்கொய்தாவின் ஆதிக்கம்அழிந்துவிட்டதாகப்பரவலாக பேசப்பட்டது.

அந்த இயக்கத்தின் முக்கிய தளபதிகள் ஐ.எஸ். போன்ற அமைப்புகளில்சேர்ந்துவன்முறை களில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் கருதப்படுகிறது.

இந்த நிலையில்தான் பென் வேல்லஸின் கருத்து வெளியாகியிருக்கிறது.

# பசுபிக் தீவில் நிலநடுக்கம்

டாங்கோ.டிசெ.25
பசுபிக் பெருங்கடலில் அமைந்துள்ள டாங்கா தீவில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ளடாங்கோதீவுப்பகுதியில்ஏற்பட்டஇந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6. 4 ஆகப்பதிவாகியது. இந்த நிலநடுக்கம் 100 மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டது. ஆனால் சுனாமிஎச்சரிக்கைஏதும்விடுக்கப்படவில்லை என்று பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம்சார்பில்தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தநிலநடுக்கத்தினால்ஏற்பட்டுள்ளபாதிப்புகள்குறித்ததகவல் நேற்று இரவு வரை வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





பிரிட்டனின் இரண்டாவது எலிசபெத் மகாராணி சகலருக்கும்தனதுநத்தார்வாழ்த்துக்களைத்தெரிவித்தார். 92வயதான இவர் வெளியிட்ட 2018ஆம் ஆண்டு நத்தார்வாழ்த்துச்செய்தியிலேயேஉலகவாழ்மக்கள் அனைவருக்கும் தன்னுடைய நத்தார் வாழ்த்துக்களைத் தொரிவித்துள்ளார்.

# நைஜீரியாவில் துப்பாக்கிச்சூடு

## 17பேர் சாவு

அபுஜா.டிசெ.25
நைஜீரியாவின்ஜம்பாராமாவட்டத்தில்துப்பாக்கிகளுடன் திடீரென ஊருக்குள் புகுந்த ஒரு குழுவால், அங்கு 17பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். நைஜீரியாவில்கும்பல்களுக்கிடையேநடக்கும்மோதல்கள்அதிகமடைந்துள்ளன. குறிப்பாக ஜம்பாரா, கதுனா மாநிலங்களில் துப்பாக்கிகளுடன் வந்து தாக்குதல் நடத்துவது கடந்த சில மாதங்களாக அதிகரித்துள்ளது. ஜம்பாராவில்மட்டும்இந்தஆண்டுநூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் அங்கு அதிக அளவான பொலிஸார் குவிக்கப்பட்டுக் கண்காணிக்கப்படுகிறது. இந்த நிலையில், ஜம்பாரா மாநிலம் பாருமாவட்டம்மகாமிகிராமத்தில்சனிக்கிழமைதிடீரென நுழைந்தநபர்கள், அங்குள்ளவர்களைக்கண்மூடித்தனமாகத் துப்பாக்கியால் சுட்டனர்.

இதில், 17 பேர் சாவடைந்தனர். தாக்குதலைத் தொடர்ந்து அந்தப்பகுதியில்இனியும்தாக்குதல்நடப்பதைத்தடுக்கும் வகையில், கூடுதல் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.



# இரண்டு தொகுதிகளில் இடைத்தேர்தல் முடிவுகள்

## குஜராத்தில் பா.ஜ.க. - ஜார்கண்ட்டில் காங்கிரஸ்


புதுடெல்லி.டிசெ.25
இந்தியாவின் குஜராத் மாநிலம் ராஜ்கோட் மாவட்ட, ஜஸ்டன் மற்றும் ஜார்கண்ட் மாநிலம் கோலேபிரா சட்டப்பேரவைத் தொகுதிகளுக்குக் கடந்த 20ஆம் திகதி இடைத்தேர்தல்கள் நடந்தன. இந்தத் தேர்தல்களில் 71 சதவீத வாக்குகள் பதிவாகின. ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர் மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில் பாரதீய ஜனதாக்கட்சியிடம்இருந்துகாங்கிரஸ் ஆட்சியைக் கைப்பற்றியதால் இந்த இடைத்தேர்தல்கள் இரண்டு கட்சிகளுக்கும் முக்கிய மானதாக இருந்தது. இந்த நிலையில், ஜஸ்டன் தொகுதியில் பதிவான வாக்கு முடிவுகளின்படி,





பா.ஜ.க. வேட்பாளரும் மாநில அமைச்சருமான குன்வர்ஜி பவாலியா வெற்றி பெற்றார். இவர் காங்கிரஸ் வேட்பாளர் அவ்சர் நகியாவை 19ஆயிரத்து 979

வாக்குகள்வித்தியாசத்தில்தோற்கடித்தார். கடந்த ஆண்டு நடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் இதே தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளராகக் களமிறங்கிய குன்வர்ஜி பவாலியாவே வெற்றி பெற்றார். கடந்த ஜூலை மாதம் அவர் தன்னுடைய அமைச்சுப் பதவியைத் துறந்துவிட்டுப்பா.ஜ.காவில்இணைந்தார்என்பதுகுறிப்பிடத்தக்கது. இதற்கு மாறாக ஜார்கண்ட் மாநிலம் கோலேபிரா தொகுதியில் இடைத்தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் நமன் பிக்சல் கொங்காரி வெற்றி பெற்றார். பா.ஜ.க வேட்பாளர் பசன்ட் சோரங்கைவிட 9ஆயிரத்து 658 வாக்குகள் அதிகம் பெற்று இவர் வெற்றி பெற்றார்.

# ஓராண்டு சிராத்த்த தினம்





தோற்றம்
10 . 04 . 1947

மறைவு
04 . 01 . 2018

## அமரர்
# துரைச்சாமி வைத்தீஸ்வரன்

(ஈஸ்வரன் அயன் வேக் சொப் உரிமையாளர் - மானிப்பாய்)

**திதி : 25.12.2018**

அவர்களின் ஓராண்டு சிராத்த்த தினம் இன்று (25.12.2018) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்.

| | | | |
|---|---|---|---|
| மனைவி | : | திருமதி யோகாம்பிகை வைத்தீஸ்வரன் 077 260 9529 | |
| மகள் | : | விஜிதா மணிவண்ணன் (0044 785 303 0758) | (U.K) |
| மருமகன் | : | நடராஜா மணிவண்ணன் | (U.K) |
| பேரப்பிள்ளைகள் | : | ஆதிகேசவன், குந்தவை | (U.K) |
| மகன் | : | வைத்தீஸ்வரன் முகுந்தன் | (Swiss) |
| மருமகள் | : | சரீனா முகுந்தன் (0041 792 567 045) | (Swiss) |
| பேரப்பிள்ளை | : | நேஹா | (Swiss) |
| மகள் | : | சிந்துஜா மல்க்கம் (0044 737 745 3080) | (Scout land) |
| மருமகன் | : | மல்க்கம் (டினேஸ்) | (Scout land) |
| பேரப்பிள்ளைகள் | : | மித்ரா, மாயா | (Scout land) |

சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய் இந்துக்கல்லூரி முன்,
மானிப்பாய்.

(CS 21979)(14.17)

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் துரைச்சாமி வைத்தீஸ்வரன்

(கைலஸ்வரன் அயன் வேர்க் உரிமையாளர்)

மலர்வு 10.04.1947 — உதிர்வு 04.01.2018

உங்கள் அன்பை
உங்கள் கருணையை
உங்கள் பண்பை
உங்கள் அறிவை
கடைசி மூச்சு வரை உங்கள்
உழைப்பை எல்லாவற்றையும் எழுதி
விட தான் நினைக்கிறேன்
முடியவில்லை அப்பா
உங்கள் அன்பை தோற்கடிக்கும்
மற்றொரு அன்பை உலகில் யாரும்
தரப்போவதில்லை உங்களைத் தவிர



நீங்கா நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.

(CS 22048) (14,17)

---

உ

அருள்மிகு ஸ்ரீவாராஹி அம்பாள் துணை



### எங்களை விட்டுப் பிரிந்தாலும் எங்கள் இதயத் தடாகத்தில் மொட்டவிழ்த்து மலர்ந்து மணம் பரப்பும் தங்களது

# எண்பத்தியாறாவது பிறந்தநாள்

## அமரர் சுப்பையா நல்லையா

(முன்னாள் வனபரிபாலன இலாகா உத்தியோகத்தரும், சிலோன் புரூவரி லிம்டெட் ஸ்தாபனத்தில் கடமை ஆற்றியவரும், கொக்குவில் மேற்கு ஸ்ரீ வாராஹி அம்பாள் ஆலயத்தின் நிர்வாகஸ்தராக பணிபுரிந்தவருமாவார்)

**25.12.1932 25.12.2018**



காலச்சக்கரம் தங்கள் பிரிவை நான்கு ஆண்டுகள் உருண்டோடி கடக்க தாங்கள் அருள்மிகு ஸ்ரீவாராஹி அம்பாள் சமேத கைலையங்கிரிநாதர் திருவடித்தாமரையில் அமைதியுற்றிருக்கும் இவ்வேளையில் எங்கள் அன்புத் தெய்வமே ! தங்களது எண்பத்தியாறாவது பிறந்தநாள் இன்று (25.12.2018) எங்கள் இதயத்தடாகத்தில் மணம்கமழ் மலராக மொட்டவிழ்த்து விரிந்துள்ளதே ! மறக்குமா நெஞ்சம் ? மறக்கத்தான் முடியுமா அப்பனே !

இம்மாநிலம் கொண்டாடும் இறைபிதா இயேசுபிரான் அவதரித்த இப்பெருநாளில் தாங்களும் தங்கள் அன்புத்தாய்மடி வந்தடைந்தீர்கள். தங்கள் இல்லத்தவருக்கு பொன்னாளாக அமைந்த இந் நன்நாளில் தங்கள் பிறந்தநாளை நினைவிருத்தி அன்புத்துணைவி, அருமைச்செல்விகள், அன்பு மருமக்கள், வம்சவாரிசுகள், பெறாமக்கள், அன்புச்சகோதரிகள், மச்சாள்மார்கள், மைத்துனர்கள், நண்பர்கள் ஒன்றிணைந்து தங்களுக்கு “HAPPY BIRTHDAY” கூறி மனத்திரையில் நிழலாடவிட்டு வாழ்த்துவது உங்கள் அகக்கண்ணில் ஒளிர்கின்றதா ? அழகு முகத்தில் புன்முறுவல் பூக்கின்றதாஐயனே !

என் இல்லத்தரசே ! தங்கள் நற்கரம் பற்றிய நாள் தொட்டு என் வாழ்வின் ஆசைக் கனவுகளை எல்லாம் நனவாக்கி குறைவின்றி நிறைவுடன் வாழவைத்தீர்களே ! வாழவைத்திருக்கின்றீர்களே ! தங்கள் பொற்பாதங்களுக்கு ஆயிரம் கோடி நன்றிமலர்கள் அர்ச்சனை சமர்ப்பணம் தெய்வமே !

தங்கள் ஸ்ரீவாராஹிவம்ச குடும்பத்தினர் இனிமை நிறைய, நலம் வாழ நல்லாசி நல்குங்கள் எங்கள் பாசமிகு அன்புருவே !

மறுபிறவி நிஜமானால் மறுபடியும் மணவாழ்வில் நாம் இணைய அருள்மழை பொழியும் அம்பிகையாம் ஸ்ரீ வாராஹித்தாயின் நல்வரம் வேண்டி நிற்கின்றேன் என் கண்கண்ட தெய்வமான அன்புக் கணவரே ! கணவர் என்னை 55 வருட வாழ்க்கையில் கோடி கோடித்தரம் இந்திரா என அழைப்பவர் ! அழைத்தவர் !

*“ ஸ்ரீ வாராஹி சந்நிதி நெஞ்சுக்கு நிம்மதி ”*
*ஓம் சக்தி ! ஓம் வாரா ஹி !*

அன்பு மனைவி **இந்திரா.**

திருமதி இந்திராணி நல்லையா
“வெண்மதி ”ஆனைக்கோட்டை.
25.12.2018

(C 8771)(14,17)

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில் அரச முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றிய

**அமரர் விஜயேந்திரன் வினோதினி**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், நல்லூர்.**

(CS 22057) (14.17)

**எங்கள் அன்பு நிறைந்த வாடிக்கையாளர்களே!**

எங்கள் நிறுவனத்தால் நத்தார், புதுவருட சோடினைப் பொருள்கள், நத்தார்மரங்கள், நத்தார் உடைகள் மற்றும் அன்பளிப்பு பொருள்கள் என்பவற்றிற்கு 30% கழிவுகள் வழங்கப்படும். இவை 24 ஆம் திகதிவரை மட்டுமே என்பதனையும் அறியத்தருகின்றோம்.

**A.C.D**
**NO-212,214 K.K.S Road, Jaffna**

## முன்பள்ளி ஆரம்பம்


02.01.2019 அன்று கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையத்தில் வண. தோமஸ் முன்பள்ளி ஆரம்பமாகும். இந்த முன்பள்ளியானது சிறார்களுக்கு இலவசமாக கல்விகற்பிக்கப்படும்என்பதனைஅறியத்தருகின்றோம்.

**வண. தோமஸ் முன்பள்ளி**
**மத்தியூஸ் வீதி - யாழ்ப்பாணம்**

**பொறுப்பாசிரியர்**
**திருமதி எ.பேரின்பராணி**

## மரண அறிவித்தல்கள்

# வேலுப்பிள்ளை குணரட்ணம்



காரைநகர், கோவளத்தைப் பிறப்பிடமாகவும் பலகாட்டை வாழ்விடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை குணரட்ணம் கடந்த (23.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கலைவாணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவறதி, சிவதேவி, சிவகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனகசுந்தரம் (கண்ணன்) அன்பு மாமனாரும் ஆதித்தன், ஆரணி, கிசானா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, ஏகநாயகி மற்றும் ஈஸ்வரி, கந்தையா காலஞ்சென்ற துரைராசா மற்றும் தங்கரத்தினம், இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் தர்மராசா, பரஞ்சோதி, காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் சிவகலா, காலஞ்சென்ற ஜெயலட்சுமி மற்றும் தயாநிதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காலஞ்சென்ற தேவராசாவின் மைத்துனரும் மகேஸ்வரியின் அன்புச்சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2018) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் யாழ்ப்பாணம் வைற் ஹவுஸ் அந்திய கால சேவை மண்டபத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வேம்படி, காரைநகர்.**
**077 645 2081**

(CS 22059)(15.17)

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 15 . 07 . 1933

உதிர்வு 09 . 12 . 2018

09.12.2018 இறைபதம் அடைந்த எம் குடும்பத்தலைவி

**அமரர் யோகவனம் நவரத்தினமணி**

அவர்களின் மரணச்செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இறுதி அஞ்சலியில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். 26.12.2018 புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**சந்தை வீதி,**
**சுன்னாகம்.**

(CS 22003) (14.17)

**குடும்பத்தினர்.**

# தம்பிராசா செல்வராசா

***(பால் செல்வம்)***



கடுக்காயிடி லேன் நல்லூரைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா செல்வராசா நேற்று (24.12.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவயோகத்தின் அன்புக் கணவரும் பிறேமிளா, நிர்மலா, சர்மிளா, நிரோஜினி, சுபாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் உதயகுமாரன், பாலதாஸ், ஞானகுமார், பிரபாகரன், சந்திரகாந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற தனுஷன், சுலக்சன், தனுசியா, சங்கவி, வைஸ்ணவி, சங்கீத், அபியா, டினோஷா, மதுஷயன், சாயகி, தணிகேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2018) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 22055)(14,17)

**077 3341996 / 021 2212612**

## மரண அறிவித்தல்

# இராசையா பேரின்பநாதன்

*(பிரபல வர்த்தகர் - சுன்னாகம்)*



யாழ். புங்குடுதீவு 7ஆம் வட்டாரம் ஊரதீவைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 5ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும், ஜேர்மனி Delmenhorst ஐ தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா பேரின்பநாதன் 22.12.2018 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற இராசையா மற்றும் இலட்சுமி (கனடா) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராசா இராசம்மா மற்றும் சரஸ்வதி(பிரான்ஸ்) தம்பதிகளின் அன்பு மருமகனும், லோகேஸ்வரநாயகியின்(மலர் - ஜேர்மனி) பாசமிகு கணவரும் கரன் (ஜேர்மனி), கம்ஷா (ஜேர்மனி), தனுஷா(ஜேர்மனி), றபிஸ் (ஜேர்மனி), அனோஸ் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பேரம்பலம் (கனடா), காலஞ்சென்ற மனோன்மணி மற்றும் மனோராணி (கனடா), மனோரஞ்சிதம் (பிரான்ஸ்), நாகேஸ்வரி(பிரான்ஸ்), குகநாதன்(இலங்கை- இராஜலக்சுமி ஹாட்வெயார் உரிமையாளர்), தங்கேஸ்வரி(இலங்கை), கோகிலநாதன்(டென்மார்க்), காலஞ்சென்ற கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பிறேம்குமார்(ஜேர்மனி),கண்ணன்(ஜேர்மனி),ஸ்ரேவானி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் கோபாலராசா(ஜேர்மனி), ஆனந்தராசா(பிரான்ஸ்), காலஞ்சென்ற வரதராசா,சற்குணராசா(பிரான்ஸ்),அகிலாண்டநாயகி(ஜேர்மனி),மோகனாம்பிகை(பிரான்ஸ்), தர்மராசா(ஜேர்மனி), பற்குணராசா(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சந்திராதேவி (கனடா), காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் அமிர்தலிங்கம்(கனடா), நல்லையா(பிரான்ஸ்), முத்துலிங்கம் (பிரான்ஸ்), காலஞ்சென்ற விஜி மற்றும் றமா(இலங்கை), காலஞ்சென்ற சரவணபவன், மரியா (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாந்திமாலா(ஜேர்மனி), காலஞ்சென்ற அபி மற்றும் ஜெயசிறி(பிரான்ஸ்), கிருஸ்ணகுமார்(ஜேர்மனி), ஈசன்(பிரான்ஸ்), வனஜா(ஜேர்மனி), சில்விஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகலனும் அஞ்சலி(ஜேர்மனி), லியோன் (ஜேர்மனி), ரிஷா (ஜேர்மனி), துர்க்கா(ஜேர்மனி), அய்ஷா(ஜேர்மனி), ஹரிஸ்(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.12.2018 ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**154, பழைய பூங்கா வீதி, சுண்டுக்குளி.**

(CS 22051) (14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 494 9320**



# அர்த்தமுள்ள இயேசு பிறப்பு!

 க.அருள்நேசன்

*அருள்மொழி வல்ல திரு அவதாரன்
பாவங்கள் நீக்கும் தேவகுமாரன் கைத்துணி
ஒன்றில் கண்களைத் திறந்து ஆநிரைத்
தொழுவில் அவதரித்துள்ளான்!
(இயேசுகாவியம் கவியரசர் கண்ணதாசன்)*

**இயேசு பெருமானின் அவதாரம் அதிசயமானது!**

இந்தப் பனிக்காலத்தில், விடுமுறை நாள்களில், மார்கழி 25 ஆம் நாளில், மனுக்குல மீட்பராம் இயேசுவின் பிறப்பு விழாவை அகில உலகும் கொண்டாடுகின்றது. இந்த நாள்களில் பாலன் குடிலை அலங்கரிக்கின்றோம். பரிசுப் பொருள்களைப் பரிமாறிக் கொள்கின்றோம். வாழ்த்துச் செய்திகளை மற்றவர்களுக்குத் தெரிவிக்கின்றோம். வானவேடிக்கைகளைச் செய்கிறோம். குதூகலமாகக் கொண்டாடுகின்றோமே எதற்காக? இறைவன் இன, மத, மொழி, சாதி பேதங்கள் இன்றி தனது பிறப்பால் அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொண்டு வந்ததால்.

இந்த பூமிப் பந்தில் ஆயிரம் ஆயிரம் அரசர்கள், அரசியல்வாதிகள், மதத் தலைவர்கள், புரட்சித் தலைவர்கள் மற்றும் விடுதலை வீரர்கள் என அனைவரும் தோன்றி மறைந்தார்கள். இன்னும் உலகத்தில் ஒவ்வொரு நிமிடமும் மனிதன் பிறந்து கொண்டிருக்கிறான். இவர்கள் எல்லோருடைய பிறப்பையும்விட இயேசு பெருமானின் அவதாரம் அதிசயமானது. ஏனென்றால், அவருடைய பிறப்பு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே முன்னறிவிக்கப்பட்ட, காலங்காலமாக இஸ்ராயேல் மக்கள் எதிர்பார்த்த ஒரு நிகழ்வு. அந்த வகையில், எசாயா இறைவாக்கினர் தனது நூலில் (எசா7:14) "இதோ கன்னிப் பெண் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள். அவன் எம்மானுவேல் என்னும் பெயர் பெறுவான்" என்று தீர்க்கதரிசனமாகக் கூறினார்.

இங்ஙனம் பழைய ஏற்பாட்டில் எல்லாப் பக்கங்களிலும் அவர் நிழல் தெரிந்தது என்றால் அது மிகையாகாது. இயேசு ஆண்டவர் மனித சுபாவம் அணிந்ததன் மூலம் மனிதத்தின் மாண்பை உயர்த்தினார். அவருடைய பிறப்பு ஒரு புராணக் கதையோ, இதிகாசமோ அல்ல. இது அகுஸ்து சீசர் ஆட்சியில் யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊரில் நடந்த ஒரு வரலாற்று நிகழ்வு (லூக் 2:1,45). இயேசுவின் பிறப்பு தான் காலத்தையே பிரித்தது என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. இத்தகைய சிறப்புக்கள் நிறைந்தது இயேசு நாதரின் பிறப்பு.

**ஏழைகளின் தோழனாக
வியத்தகு ஆலோசகரின் பிறப்பு**

தூய யோசேப் நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த மரியாவைக் கூட்டிக்கொண்டு, சனத்தொகையைக் கணக்கெடுக்க தனது சொந்த ஊரான பெத்லகேமுக்கு போகிறார். அங்கு அவர்களுக்கு விடுதியில் இடம் கிடைக்கவில்லை. எளிமையை விரும்பும் இறைவன் ஏழைகளின் தோழனாக மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். இதையே தூய பவுலடியார் "அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்" என அழகாகக் கூறுகிறார். வியத்தகு ஆலோசகர், வலிமை மிகு இறைவன், அமைதியின் அரசர் என வர்ணிக்கப்பட்டவர் ஏழைகளில் ஒருவராகத் தன்னை இனங்கண்டு கொண்டார். யூத சமுதாயத்தில் பரிசேயர், சதுசேயர், சட்டம் கற்றுத் தேர்ந்தோர் மெசியா எங்கே, எப்போது பிறப்பார் என்று அறிந்திருந்தார்கள். ஆனால் அவரது மாட்சியைக் காண அவர்கள் அழைப்புப் பெறவில்லை. சமுதாயத்தாலே புறக்கணிக்கப்பட்ட இடையர்களும், தாம் கற்றது கையளவு என்று தம்மைத் தாழ்த்திக் கொண்ட ஞானிகளும் தான் அவரைக் காணும் பாக்கியம் பெற்றார்கள். இந்த நிகழ்வு அகந்தை கொண்டவர்களுக்கு கடவுளின் தரிசனம் கிடைப்பதில்லை என்பதற்கு ஒருசாட்சி. அத்தோடு கடவுளை விட்டுப் பிரிந்து வாழும்போது நாம் உயிரற்ற பிணமாக, சடப்பொருளுக்குச் சமமாகத் தான் வாழ்கிறோம். இறைவனை விட்டு ஓடாமல், இறைவனை நோக்கி நம் வாழ்வை முன்னெடுக்கின்றபோதுதான் வாழ்வு நிறைவு பெறுகிறது என்ற செய்தியையும் தருகிறது.


**நன்னெறியில் வாழ்ந்து, அவர்
கொண்டு வந்த மீட்பை நாம் சுவைப்போம்!**

மரியின் மைந்தன் இயேசு, அனைத்துலக மீட்பராக இந்த உலகத்தில் பிரவேசித்தவர். அவர் அரசியல் அடக்கு முறையிலிருந்து யூதர்களுக்கு விடுதலை கொடுக்கவரவில்லை. மாறாக பாவ அடிமைத்தனத்திலிருந்து நம் அனைவரையும் விடுவிக்க வந்தார். இன்றைய உலகில், போதைப் பொருள்களுக்கு அடிமையாகும் நிலை, தொழில்நுட்பக் கருவிகளின் அதீத தவறான பாவனை, இயற்கையை அழித்தல், வன்முறைகள், மனித உரிமை மீறல்கள், பாலியல் வன்கொடுமை போன்ற பாவங்கள் முடிவிலிகளாகப் பெருக்கெடுத்துக் கொண்டே இருக்கின்றன. தூய ஏரோணிமுஸ் "மனிதன் முழுமையாக வாழ்வது கடவுளுக்கு மகிமை (The glory of God is human being fully alive) என்று மொழிந்தார். பிறந்துள்ள பிஞ்சுப் பாலகன் இயேசுவும் ஒழுக்கம் நிறைந்த வழியில், நன்னெறியில் வாழ்ந்து, அவர் கொண்டு வந்த மீட்பை நாம் சுவைக்கவும், இறையாட்சியை இந்த மாநிலத்தில் நிறுவவும் நமக்கு அழைப்புவிடுக்கிறார். அவருடைய பிறப்பால் விண்ணகமும், மண்ணகமும் மகிழ்ந்தது என திருவிவிலியம்; கூறுகிறது (லூக் 2:10,1314). அவர் மகிழ்ச்சியை எமக்குப் பரிசாகத் தந்தார். இந்த கிறிஸ்மஸ் பண்டிகை அந்த மகிழ்ச்சியை அனைவரோடும் பகிர்ந்துகொள்ள நம்மை அழைக்கிறது. நாம் மற்றவர்களை மகிழ்ச்சிப் படுத்தும் போதுதான் நாமும் நிம்மதியை, நிறை மகிழ்ச்சியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது நிதர்சனமான உண்மை. எனவே, இந்த கிறிஸ்து பிறப்பு எல்லோருக்கும் சுபீட்ச்சமான புது வாழ்வை கொடுக்க வேண்டி, வீண் ஆடம்பரங்களைத் தவிர்த்து அர்த்தமுள்ளதாக்குவோம்.

*ஏர் பிடித்து வன்னிலத்தை உழுது வாழும்
ஏற்றமுள்ள உழவர் தம் உழைப்பில் உள்ளான்.
பார் விளங்கச் சாலைக்குக் கல்லுடைக்கும்
பாட்டாளிக் கூட்டத்தின் நடுவில் இறைவன் உள்ளான்!
(கீதாஞ்சலி மகாகவி இரவீந்திரநாததாகூர்)*

கட்டுரையாளர்:
அருட்.பணிம.மரிசுதன் செ.தா
அருள் ஆச்சிரமம்,
யாழ்ப்பாணம்.





## அனைவரும் சம உரிமையோடு வாழ்வதற்கு அரசியலாற்றுங்கள்!



கிறிஸ்துபிறப்புஉலகம்முழுவதிலும்இன, மத, நிற, மொழி வேறுபாடின்றிக் கொண்டாடப்படுகிறது. நாட்டை அச்சுறுத்திய ஒக்ரோபர் 26 அரசியல் சூழ்ச்சி ஓரளவு சுமூகமாகத் தீர்ந்துள்ளமை மனதுக்கு நின்மதி தருகிறது. எதிர்பார்த்த பயங்கர முடிவுகள் இன்றிப்பிரச்சினைமுடிவுக்குவந்துள்ளது. தேசிய ஜனநாயக முன்னணி உதயமாகி நிறைவேற்று அதிகாரத்துக்கு முடிவு கட்டவுள்ளதாகச்செய்திகள்தெரிவிக்கின்றன. இதுவரவேற்கப்படவேண்டியதே. இலங்கை நாட்டு மக்களுக்கு நீதியான, சமத்துவமான, அமைதியான வாழ்வு கிடைப்பதற்கு அனைத்து அரசியல்வாதிகளும்உழைக்கவேண்டும். தமிழ்அரசியல்கட்சிகள்பணத்துக்கும், பதவிக்கும் விலை போகாத வரையில் நாம் அரசியல் பலம் மிக்கவர்களாக இருப்போம். தமிழ் அரசியல்வாதிகளுக்கும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் சார்பில் அன்பு வேண்டுகோள் ஒன்றை விடுக்க விரும்புகிறோம்.

தயவு செய்து தமிழ் மக்களையும் அவர்களின் அடிப்படை உரிமைகளையும்பணயம்வைத்து அரசியல்நடத்தாதீர்கள். தமிழ்மக்கள் நலனுக்காக உங்கள் அரசியல் இலாபங்களைத் தியாகம்செய்யுங்கள். இலங்கையில் மூவினங்களும் சம உரிமையோடு வாழக் கூடியகூடியசுதந்திரவாழ்வுவேண்டிப்பயணியாற்றுங்கள், அனைவருக்கும் நத்தார் வாழ்த்துகள்.

**கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை.**
யாழ் ஆயர்

## விடுதலையை அனுபவிக்கின்ற மகிழ்வைப் பெறுவோமாக!



இயேசுவின் பிறப்பானது கிறிஸ்மஸ் என்ற பெயரில் உலகெங்கும் மிகுந்த உற்சாகத்தோடுகொண்டாடப்படுகிறது. இந்தவிழாவின் அடிப்படைச் செய்தியே கடவுள் மனிதன் ஆனார் என்பதாகும். இதையே திருவிவிலியத்தில் 'வாக்குமனிதர்ஆனார்:நம்மிடையே குடிகொண்டார்' (யோவான் 1:14) என்று யோவான்நற்செய்தியாளர்குறிப்பிடுகின்றார். ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட பெற்றோருக்கு மகனாக, நாம் தொட்டுணரக்கூடிய ஒரு மனிதக் குழந்தையாகப் பிறக்கின்றார்இயேசு. இதைத்தான்கிறிஸ்துவின்மனுவுடலேற்புஎன்று கிறிஸ்தவ இறையியல்குறிப்பிடுகின்றது. இந்த மனுவுடலேற்புஎன்பது கடவுள் மனுக்குலத்தின்மேல் கொண்ட அளவற்ற அன்பின் அடையாளமாகஇருக்கின்றது. ஆகவேநத்தார்என்பதுகடவுளின்அன்புக்குநாம் எடுக்கும்விழா ஆகும். கடவுள் மனிதனானது நமக்கெல்லாம் மகிழ்ச்சி தருகின்ற நற்செய்தியாகும். இதை நாம் கொண்டாட வேண்டும். ஆனால் இந்தக் கொண்டாட்டம் வெளியரங்கமானதாக மட்டும் நின்றுவிடாமல் உள்ளார்ந்ததாகவும் அமைய வேண்டும். இயேசு தன்னுடைய பிறப்பின் ஊடாகக் கொண்டுவந்த விடுதலையை, இரட்சிப்பை, மீட்பை அனுபவிக்கின்ற மகிழ்வை நாம் பெறவேண்டும். அதுதான் உண்மையான மகிழ்ச்சி. உங்கள் அனைவருக்கும் இனிய நத்தார் நல்வாழ்த்துக்கள்.

**இம்மானுவல் பெனாண்டோ ஆண்டகை.**
மன்னார் ஆயர்

## இருள் விலக்கும் இடையராவோம்!

வயலில் இராக்காவல் செய்யும் பாமர இடையர்களுக்குத் தான் மகிழ்ச்சியூட்டும் அந்த நற்செய்தி கிடைத்தது. "அஞ்சாதீர்கள், இதோ! எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்றுமெசியாஎனும்மீட்பர்உங்களுக்காகத்தாவீதின்ஊரில் பிறந்துள்ளார். குழந்தையைத் துணிகளில் சுற்றி தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள். இதுவே உங்களுக்கு அடையாளம்.' என்ற வானதூதரின் வார்த்தையைக் கேட்டு இடையர்கள் தேடிச் சென்றார்கள். தாம்கண்டுகொண்டதை மக்களுக்குத்தெரிவித்தார்கள். அதை இன்றும் மகிழ்ந்து உலகம் கொண்டாடுகின்றது. சாதாரண பாமர மக்களின்பொறுப்புடனான இந்தப்பகிர்வு, வாய்மொழிச்செய்திகளாகக்காலம் காலமாகப் பகிரப்பட்டு ஒளிவிழாக்களாக, வாழ்த்து மடல்களாக, நத்தார் கரோல் கீதங்களாக இன, மத, மொழி, நாடு கடந்து உண்மைக்கு சாட்சி சொல்லும் விழாக்களாகச் சிறுவர் முதல் பெரியோர் வரை மகிழ்வூட்டப்படுகிறது. இருள் சூழும் சமூகச் சீரின்மைகளில் இருந்து ஒளியாக மாறக் கிடைத்த சந்தர்ப்பங்களில் நாமும் இடையர்களாக, நல்ல செய்தியைப் பகிரும் தூதர்களாக செயற்பட்டு நல்வாழ்த்துக்கள் பகிர்வோம்.

**சே.யோசப்பாலா**
செயலர், கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்.

## இயேசுவின் போதனைகளைப் பின்பற்றுவோம்



கிழக்கு வானில் தோன்றி ஞானிகளுக்கு வழிகாட்டிய நட்சத்திரம் அவர்களுக்கு முன் சென்று பாலகன் இயேசு பிறந்த மாட்டுத் தொழுவத்துக்கு மேல் உதித்த அந்த இரவானது அளவற்ற அன்பின் செய்தியையே சுமந்து வருகின்றது.

இயேசு நாதர் தம் வாழ்நாள் முழுவதிலும் பாசமும் நேசமுமிக்க வார்த்தைகளையே பயன்படுத்தினார். மீனவர்கள், தச்சர்கள், கமக்காரர்கள் போன்ற சாதாரண பாமர மக்களுடனேயே அவர் உரையாடி வந்தார். "கண்ணுக்கு கண் பழி வாங்குதல் என்றும் கல்லால் தாக்கப்படின் மலையைக் கொண்டு திருப்பித் தாக்கிநீதியைநிலைநாட்டவேண்டும்என்றுமே இதுவரை உங்களுக்குப்போதிக்கப்பட்டுவந்திருக்கின்றது. ஆயினும்எதிரியின்மீதும்அன்பைச்செலுத்துங்கள். உம்மை வெறுப்போர் இம்சிப்போர் மீதும் நீ பாசத்தைச் செலுத்து" என்பதே அவரது போதனைகளாகும்.

நத்தார்என்பது இத்தகைய உயரியநோக்கத்தைக்கொண்ட உன்னதமானவரின் அளவற்றநற்குணங்களை மீண்டும் மீண்டும் நினைவுகூரும் காலமாகவே அமைகின்றது. ஆகையால் இயேசுவின் அந்தக் கொள்கையை நிலைநாட்ட திடசங்கற்பம் கொள்ள வேண்டியது எம்மவரின் கடமையாகும். அழிவை நோக்கி அகன்ற வாயில் வழியே செல்லத் துடிப்பவர்களுக்கு நத்தார் பண்டிகையானது புதியதோர் வாழ்க்கையை நோக்கிப்பயணிப்பதற்கானவழியாகவேஅமைகின்றது. சகமனிதர்களைஏமாற்றித்தீயஎண்ணங்களோடு வாழும் மனிதர்கள் அவற்றை விடுத்து நற்குணமுடையவர்களாக மாறாதுவிடின் அவர்களால் ஒருபோதும் சுவர்க்க வாயிலை அடைய முடியாது என்றே இயேசு போதித்துள்ளார்.

அமைதி, கருணை, மனிதநேயம் போன்ற இவ்வுலக வாழ்க்கையின் உயர்வுக்கான பண்புகளைப் போதிக்கும் இயேசு பிரானின் போதனைகளும் மனிதாபிமானம், சகவாழ்வு, தியாகம் பற்றிய அவரது நற்செய்திகளும் இந்த நத்தார்க் காலத்தில் நாடெங்கிலும் எதிரொலிக்கட்டும்.

இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்களுக்கும் உலகெங்கிலும் பரந்து வாழும் அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் எனது இனிய நத்தார் வாழ்த்துகள்.

**மைத்திரிபால சிறிசேன,**
அரசதலைவர்

## பிரிவினையிலிருந்து விடுக்கும் நத்தார்!



நத்தார் எல்லையில்லா மகிழ்ச்சியின் காலம். கடந்த காலத்தை நினைவுகூர்ந்து, எதிர்கால நம்பிக்கையை ஏற்படுத்தும் நேரம் இதுவாகும். கிறிஸ்துவின் வாழ்க்கைப்பாடம் சிதைந்த இந்த உலகுக்கு நம்பிக்கையையும், நல்லிணக்கத்தையும் கொண்டு வந்தது. இந்தப் பொன்னான காலம் பிரிவினை வாதங்களிலிருந்து நம்மை விடுவித்து சாதி, மதம் மற்றும் மொழிகளுக்கு அப்பால்சென்று சகல இலங்கையர்கள் மத்தியிலும் சகோதரத்துவத்தையும் சக உணர்வையும் தோற்றுவிக்கும்.

உங்கள் அனைவர் மீதும் இயேசு மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் பொழிவாராக! உங்கள் அனைவருக்கும் புனித நத்தார் வாழ்த்துகள்!

**ரணில் விக்கிரமசிங்க,**
தலைமை அமைச்சர்

## ஒற்றுமையைக் கட்டியெழுப்ப ஒன்றுகூடுங்கள்!



நத்தார்பண்டிகையைக்கொண்டாடும்அனைவருக்கும்வாழ்த்துகள். இயேசுவின் பிறப்பை நினைவுகூரும் இந்த நாளில், நாட்டு மக்கள் உண்மையான நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் அடைய வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன். இந்த நாளைக் கொண்டாடும் நாம் இயேசுநாதர் இந்த உலகவாழ்வில்வாழ்ந்தும், போதித்தும்வந்த அன்பு, நீதி, மற்றும் பிறரை நேசித்தல் ஆகிய படிப்பினைகளை மறவாதிருப்போமாக. நம்பிக்கையற்ற சூழ்நிலைகளில் வாழ்வோர், ஒடுக்கப்பட்டோர், இயலாமையிலுள்ளோர் போன்றவர்களுடன் எம்மை அடையாளப்படுத்திக்கொள்வதன் மூலம் நத்தார் பண்டிகையின் உண்மையான தார்ப்பரியங்களைக் கடைப்பிடிப்போமாக. நீதி மற்றும்சமத்துவம்அடிப்படையில்இந்தநாட்டில்நிரந்தரசமாதானத்தையும்ஒற்றுமையையும் கட்டியெழுப்ப முன்வருமாறு இந்த நாட்டின் தலைவர்களை நான் அழைத்து நிற்கிறேன். அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துகள்

**இரா. சம்பந்தன்**
நாடாளுமன்ற உறுப்பினர்
தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

## இனிவரும் காலம் நல்ல கனிகளைத் தரும்!

இயேசுபிறப்பைக் கொண்டாடும் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள். இது எமக்கென்று வாக்களிக்கப்பட்ட பூமி. எமது நிலங்கள் எமது மக்களுக்கே சொந்தம். எமது மக்களின் மனங்களில் நித்திய மகிழ்ச்சியும், எமது வரலாற்று வாழ்விடங்கள் தோறும் நிரந்தர சமாதானமும் நீடித்து நிலவ வேண்டும்.

எமது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். அப்போதுதான் இனி வரும் காலம் நல்லகனிதரும் காலம் என்ற நம்பிக்கைகளை வெல்லமுடியும். நிரந்தர சமாதானம், நீடித்த சமவுரிமை, வரலாறெங்கும் துயரச்சுமைகளை சுமந்த எமது மக்களுக்கு நியாயத்தீர்ப்பு, பஞ்சம், பசி, பட்டினி இல்லாத, துயர்கள் இல்லாத எவரையும் எவரும் அடிமைகள் என்று கொள்ளாத, எவரும் சிறைகளில் வாடும் கொடுமைகள் இல்லாத, அபிவிருத்தி இல்லையென்ற அழுகுரல்கள் கேட்காத புதியதொரு சமாதான இராச்சியத்தையே நாம் விரும்புகின்றோம்.

**டக்ளஸ் தேவானந்தா,**
செயலர், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி


வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய நத்தார் தின வாழ்த்துக்கள்
ஸ்ரீ லலிதா பெஷன்
இல.165,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
சிறுவர்களுக்கான
ஆடை தினுசுகள்
பெண்களுக்கான சாறிகள்,
சல்வார்கள், பிளவுஸ்,
Top கள் மற்றும்
அனைத்து விதமான
ஆடைகளையும்
ஆண்களுக்கான சேட்டிங்,
சூட்டிங் அனைத்து
ஆடைகளையும்
ஒரே கூரையின்
கீழ் பெற்றுக் கொள்ளலாம்.
லலிதா ரெக்ஸ்
இல. 5,6 நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5260


யாழில் ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
Experts in English Training
சிறந்த வேலைவாய்ப்பிற்கு...
உள்நாட்டு, வெளிநாட்டு உயர் கல்விக்கு...
Spoken English
ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்
Reading Writing Speaking Listening
புதிய பிரிவுகள் ஆரம்பம்
யாழ்ப்பாணம் Mon,Wed,Fri 8:00 a.m Mon,Wed,Fri 3:30 p.m Sat, Sun 3.30 p.m.
நெல்லியடி Tue, Thu 3.30 p.m. Sat, Sun 3:30 p.m.
சாவகச்சேரி Tue, Thu 08.30 a.m. Sat,Sun 08.30 a.m.
சுன்னாகம் Sat,Sun 9:30 a.m
சண்டிலிப்பாய் Mon,Wed,Fri 1:30 p.m
கிளிநொச்சி Sat, Sun 10.30 a.m
கற்பிக்கப்படும் பாடத்திட்டங்கள் பற்றிய விபரங்கள்
DIPLOMA IN FLUENT ENGLISH
Diploma in Fluent English Part - I
For people who are doubtful about their English and want to speak English fluently
Diploma in Fluent English Part - II
For speakers who want to master diction and style.
• அனுபவம் மிக்க விரிவுரையாளர்களினால் Grammar பற்றிய போதிய விளக்க முறைகள் மாணவர்களுக்கு பூரணமாக வழங்கப்படுகிறது.
• ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் ஆங்கிலம் கதைப்பதற்கான சந்தர்ப்பம் கணினி மூலமான
• Online Listening பயிற்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளது .
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்
IELTS •Academic •General
•Unique Test Tips • Latest course Materials
IELTS Life Skills (A1 , B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (Reg No. P25/0056)
DMI COMPUTER EDUCATION
No.113, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
M.M.V.வீதி நெல்லியடி Tel.: 021-226 2470
No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775
No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970
சீரணிச் சந்தி சண்டிலிப்பாய் Tel.: 021 225 6665
No.19,A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655


வாடிக்கையாளர் அனைவருக்கும்
நத்தார் திருநாள் வாழ்த்துக்கள்
நியூ
வீ.எம்.கே
ஜுவல்லர்ஸ்
VMK JEWELLERY
நியூ வீ.எம்.கே ஜுவல்லறி
60 வருடங்களுக்கு மேலாக வட மாகாணத்தில்
திருமண வைபவங்களுக்கு கலைநயத்துடன்
கூடிய டிசைன்களில் தங்க நகைகளை
உங்களுக்கு ஏற்ற விதத்தில் வடிவமைத்து
கொடுக்கும் கைராசியான ஸ்தாபனம்
கண்டி வீதி, சாவகச்சேரி.
021 227 1616 / 077 7849 369
80/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 720 1117 / 021 222 2515

அன்பர்கள், ஆதரவாளர் வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய நத்தார் திருநாள் வாழ்த்துக்கள்

**GLOBAL RENT A CAR**



Prop : T. Kamal

Office : 021 221 7424
Mobile : 077 071 2317
E.Mail : globalrent25@gmail.com
Pointperto Road,பருத்தித்துறை வீதி, வீரகாளியம்மன் கோயிலடி முன்பாக யாழ்ப்பாணம்.



நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு
ஏசியன் தளபாடத்தின்
மாபெரும் மலிவு விற்பனை




இல. 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி - ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)
021 791 6911 / 076 821 9418 / 077 358 3879



Be apped with the B app



SECURED BANKING
ANYTIME, ANYWHERE
with B app

- Fund transfers among own accounts, 3rd party and other bank accounts
- Check balances and transactions
- Secured One-Time Password and Self-Unlock User ID
- Cheque book requests and stop payments
- Statement download
- Bill payments - Instant, scheduled and recurring
- View credit card transactions
- Setup standing orders
- Add 3rd party accounts and new billers
- Find the nearest Branch/ATM/CDM

And many more features.
Download the B app experience now!

STEP 01 Download the 'BOC B app' from Google play / App Store
STEP 02 Visit the nearest BOC branch and submit your B app application form and experience high speed banking

*Existing Internet Banking users can use their existing User ID along with the Password received via SMS

www.boc.lk
Call Centre
BANK OF CEYLON BOC Bankers to the Nation



வாடிக்கையாளர் அனைவருக்கும் இனிய நத்தார் தின வாழ்த்துக்கள்

Since 1978

நடராசா கஜந்தன்



நியூ மைதிலி ஜுவலர்ஸ்



காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன்
மின்னும் பொன்நகையால் மேலும் உங்கள்
புன்னகை ஒளிரும் விரையுங்கள்
நியூ மைதிலிக்கு


ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 7878 Fax:021 2217877
newmaithily40@gmail.com
New Maithily Jewellers
0094212217878

மதிப்பிற்குரிய நியூ மைதிலி வாடிக்கையாளர்களே தங்களிற்கு மதிப்பளித்து நாங்கள் வழங்கும் 2019 ஆம் ஆண்டுக்கான நாட்காட்டியினை எம்மிடம் வந்து பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.



அரச
அங்கீகாரம் பெற்ற
சாரதி பயிற்சிப்
பாடசாலை
DS No - 882
சசிகா
லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக்கொள்ள
எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்
அனைவருக்கும்
இனிய நத்தார்
வாழ்த்துக்கள்
தலைமைக் காரியாலயம்:
இல.57,
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
077 722 6247
021 221 7678
021 221 7578
077 614 0361
sasikalearners
புதிய கிளை:
கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு.
T.P: 021 225 2333, 071 255 4135
வாகனப்
பயிற்சியாளர்களுக்கு
நேர தாமதமின்றி
பயிற்சி வழங்கப்படும்.
(கிளை நிறுவனங்களிலும்)
வாகனப் பயிற்சியினை
மேற்கொள்ளலாம்.
sasikadrivingschool@gmail.com
sasikalearners.com
கிளைக் காரியாலயங்கள்:
வேலணை: வங்களாவடிச் சந்தி. 021 221 5472 070 301 3012
யாழ்ப்பாணம்: இல.281c, மணிக்கூட்டுக் கோபுர வீதி, Town 021 222 8004 070 301 5004
மல்லாகம்: K.K.S. வீதி. 021 224 3393 070 301 3014
சங்கானை: ஓடக்கரை வீதி. 021 225 1664 070 301 3016


வாடிக்கையாளர் அனைவருக்கும்
இனிய நத்தார் வாழ்த்துக்கள்
மயூரன்ஸ்
நகை
மாளிகை
22 கரட்
தங்கப்பவுண்
நகை வியாபாரம்
22 Karat
Gold Jewellery
MAYURANS NAKAI MALIKAI
95 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Kasthuriyar Road, Jaffna.
T.P : 021 222 3015 / 077 651 0251


BCAS
CAMPUS
BRITISH COLLEGE OF
APPLIED STUDIES
After
A/L's
PLATINUM PARTNER
No.1
BTEC Centre
in Sri Lanka
BTEC
HND
Civil
Engineering
WITH STRUCTURAL DESIGN
Leading to BEng (Hons)
20 வருடகால தொழிற்துறை சார்ந்த
உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான,
BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம்
கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...
நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக Civil Engineerig
கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாட நெறி.
பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க Civil Engineerig
நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்.
அங்கீகரிக்கப்பட்ட Laboratory களில் Material, Hydraulic, Soil நடை முறைப்பயிற்சிகள்.
Pearson
University of
East London
MADHU 0777 102131
SANCHU 0777 692318
INTAKE
NOW ON
BCAS Jaffna Campus,
#. 16, Point Pedro Road, Jaffna.
20 YEARS
ISO 9001:2008
021 221 9910
info@bcas.lk
www.bcas.lk
BCAS Ranked "Platinum Partner" No.1 once again

அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்

# அண்ணா தொழிலகம்







அண்ணா
## நூடில்ஸ்
உடனடித் தயாரிப்பு உண்ணச்
சுவையான உணவு அண்ணா
உற்பத்தி விற்பனை நிலையங்கள்
எல்லா இடமும் பெற்றுக் கொள்ளலாம்

அண்ணா
## மல்லிக் கோப்பி
உலக தரம் வாய்ந்த பொதிகளில்
உங்கள் வசதிக்கேற்ப
எமது விற்பனை முகவர்களிடம்
இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**அண்ணா தொழிலகம்**
துரை வீதி,
இணுவில்.
T.P: 021 224 1565

**ANNA INTERNATIONAL (PVT) LTD.**
214 /5,Messenger Street, Colombo - 12.
+ 941 124 36063



# நியூ நெல்சன்
## சாரதிப் பயிற்சிப் பாடசாலை
# New Nelson Driving School
அரச அங்கீகாரம்பெற்ற "A" தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

இல.89, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
021 222 4527 / 077 358 1916

- சாரதி பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புகள்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து மிக விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும்.
- அதிகூடிய பயிற்சி நேரங்கள். அதிகூடிய பயிற்சிக் காலங்கள். தவணைமுறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
- நவீன வாகனங்களில் வாகனப் பயிற்சிகள்.

அனைவருக்கும்
இனிய நத்தார் வாழ்த்துக்கள்



கிளைகள் :-

| | | |
|---|---|---|
| இல. 97A,<br>பருத்தித்துறை வீதி, நெல்லியடி.<br>021 226 1393 / 077 111 3382 | சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய்.<br>021 225 6955 / 077 794 2312/<br>071 735 8440 | பிரதான வீதி,<br>வல்வெட்டித்துறை.<br>077 557 3711 / 021 492 3733 |



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது உள்ளம் கனிந்த நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

# மிலேனியம்
உல்லாசப் பயணிகள் விடுதி மற்றும் உணவகம்

**22 AC Rooms & Hall**




24 Rooms உம் ஒன்றாக எடுத்தால்
3000/= படி 24 Rooms உம்

# Millennium
## Guest House & Restaurants

| | | |
|---|---|---|
| Bedroom | (A/C)- 4500 /- | (Non A/C) 4000/= |
| 4 Bed | (A/C)- 4000 /- | (Non A/C) 3500/= |
| 3 Bed | (A/C)- 3500 /- | (Non A/C) 3000/= |
| 2 Bed | (A/C)- 2500 /- | (Non A/C) 2000/= |







S.Sugumaran Proprietor
Nivessmns@gmail.com

No.76/60, Ramanathan Road,
(Campus Road) Kaladdy, Jaffna.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 7 ஆயிரத்து 520 குடும்பங்களைச் சேர்ந்த 24 ஆயிரத்து 512 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆயிரத்து 929 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 75 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் 15 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பிரதேசத்தில் வெள்ளத்தால் 3 வீடுகள் முழுமையாகவும் 103 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 819 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 156 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 100 குடும்பங்களைச் சேர்ந்த 347 பேர் 4 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் வெள்ளத்தால் 108 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

**முல்லைத்தீவு**

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 466 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்து 724 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 163 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 548 பேர் இடர்பெயர்ந்து 3 இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 688 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 468 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஆயிரத்து 37 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 817 பேர் இடம்பெயர்ந்து 10 தற்காலிக முகாங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 331 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 4 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 3 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 460 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரதேசத்தில் 3 வீடுகள் முழுமையாகவும் 3 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 81 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**மன்னார்**

மன்னார் நகர் பிரதேச செயலர் பிரிவில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 85 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் ஒரு இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ளனர்.

நானாட்டன் பிரதேச செயலர் பிரிவில் காற்றின் தாக்கத்தால் 12 குடும்பங்களைச் சேர்ந்த 56 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**யாழ்ப்பாணம்**

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் 4 ஆயிரத்து 257 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 642 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் ஒரு தற்காலிக முகாமில் தங்கியுள்ளனர். கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

**வவுனியா**

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் 132 குடும்பங்களைச் சேர்ந்த 455 பேர் வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. (ற-21.26)

## பெரும்...

நிறைவேற்றுக் குழுக் கூட்டம் அரச தலைவரும், முன்னணியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் கொழும்பில் அமைந்துள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுக்காலை நடைபெற்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தேசிய சுதந்திர முன்னணி, லங்கா சமசமாஜக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, பிவித்துரு ஹெல உறுமய, இடதுசாரி முன்னணி போன்ற கட்சிகள் கூட்டத்தில் கலந்துகொண்டன,

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுமந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்ததாவது:

அரசியல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தை மாதாந்தம் நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அனைத்துப் பிரதிநிதிகளும் இன்று (நேற்று) கூட்டத்தில் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்தனர். தற்போதைய அரசில் காணப்படும் குறைபாடுகள், பிரச்சினைகள் என்பன தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அனைவரையும் ஒன்றிணைத்துச் செயற்படுவதுடன், எதிர்வரும் தேர்தலை வெற்றிகொள்ளப் பெரும் கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பாகவும் தீர்க்கமாகக் கலந்துரையாடப்பட்டது - என்றார். (ற-10)

## இயற்கை...

ஏற்பட்டுள்ள வெள்ள இடர் தொடர்பாக ஆராயும் சிறப்புக் கூட்டம் நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வெள்ள இடரால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பாக ஆராய்ந்துள்ளோம். பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள், அவர்களுக்கான அவசர உதவிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பாகவும், அவர்களின் வாழ் வாதார அழிவுகள் தொடர்பாகவும் அறிக்கைகள் கிடைத்ததும் அவற்றுக்கான இழப்பீடுகள் வழங்கப்படும். அதற்காக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலகங்கள் கோரும் நிதிவிடுவிக்கப்படும். இந்த உத விகளை விரைந்து வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (ற-35.214.6)

## மரண அறிவித்தல்

**திருமதி இராசம்மா நடராசா**



அரியாலை பொன்னம்பலம் வீதியினைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா நடராசா நேற்று (24.12.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை தங்கமுத்து தம்பதியரின் அன்புப்புதல்வியும் செட்டியார் என்று அன்பாக அழைக்கப்படும் காலஞ்சென்ற நடராசாவின் அன்புமனைவியும் இராசமணி (பவளம்), மோகானம்பிகை (ராணி), நாகேஸ்வரி (கிளி), மகேந்திரராசா (மகேந்திரன்), சறோஜினிதேவி (பத்மா), புஸ்பராணி (சந்திரா) ஆகியோரின் அன்புத்தாயும் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், ஆனந்தசுந்தரம் மற்றும் தனபாலசிங்கம், சந்திரசூரியர், குகதாசன், இந்துமதி ஆகியோரின் அன்புமாமியும் உதயச்சந்திரன், உமாச்சந்திரன், நிர்மலராசா, கேசவராசா, பிரபா (மாலா), சுரேந்திரராசா, கஜேந்திரராசா, பத்மராசா, தர்மராசா, முத்தமிழ்ராசா, புஸ்பராசா, சுபத்திராதேவி, யதீஸ்குமார், காயத்திரி, லக்ஸ்ஸிகா, சகிந்தன், நிறைமதி (கீர்த்தி), கஸ்தூரி, பவித்திரா (ரம்மியா), கனுஜன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**இல. 80, செம்மணி வீதி,**
**அரியாலை யாழ்ப்பாணம்.**
**076 882 4724**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

**ம. மரிய கிறிஸ்ரி றொபேட் (அருமை)**



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் மரிய கிறிஸ்ரி றொபேட் (அருமை) கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியநாயகம் - நற்குணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அ.பி.முத்தையா (உபதேசியார்) இசபெல்லா தம்பதிகளின் அன்பு மருமகனும் சுகந்தினியின் அன்புக் கணவரும் மரின் கோபிகா (வர்த்தக வங்கி, யாழ்.), அருட்சகோதரி வேஜின் தனுகா (தி.கு.க.), லூஜின் வேணுகா (மத்திய வங்கி, கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**92, பழைய பூங்கா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

**திருமதி நவரத்தினம் தம்பிராசா ஈஸ்வரி**



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினம் தம்பிராசா ஈஸ்வரி நேற்று (24.12.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகட்டி வலஸ்முல்லை மாத்தறை பிரபல வர்த்தகர் பொன்னம்பலம் தம்பிராசா P.T.- நல்லம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற இ.போ.ச சாரதி கந்தசாமி, ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் தொழில்நுட்பக் கல்விப்பயிற்சி திணைக்களத் தலைமைச் செயலகத்தின் பணிப்பாளரும், வட மாகாண இணைப்பு அதிகாரியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான கலாநிதி ந.யோகராஜனின் அன்புத்தாயும் வலிகாமம் கிழக்கு விவாகப்பதிவாளர் மாலதியின் அன்பு மாமியும் யா / நெல்லியடி மத்திய கல்லூரியின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வியல் உத்தியோகத்தர் டினேஷ்ஷாந்த், யாழ். போதனா வைத்திய சாலை இலங்கை விஞ்ஞான சேவை பௌதிகவியலாளர், அஜிபனா ஆஷ்மி (யா/ பரியோவான் கல்லூரி உயர்தர வர்த்தகப்பிரிவு மாணவர் சியாமள வாஷுதேவ ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் யாழ். பல்கலைக் கழக கணினி பிரிவு போதனா சிரியர் சஞ்ஜீவனின் மனைவி வழிப்பேர்த்தியும் மறவன் புலோ கைலேஸ்வரியின் (பிரான்ஸ்) மைத்துனியும் பிருந்தா, சுகிர்தா (சுவிஸ்லாந்து), சிவநாதன் (பிரான்ஸ்), வர்த்தகர் ரகுநாதன், கணித ஆசிரியர் விமலநாதன் ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2018) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**விவாகப்பதிவாளர் காரியாலயம்,**
**உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.**

**தகவல் : குடும்பத்தினர்.**

# யேசு பாலன் பிறப்பை முன்னிட்டு யாழ்ப்பாணம் புனித மரியன்னை ஆலயத்தில் சிறப்பு ஆராதனைகள்







## காணாமல்...

இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று வவுனியாவில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டாவது:

எமது தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு இரு ஆண்டுகள்நிறைவடையவுள்ளன. எமது கோரிக்கைகளுக்குச் சாதமான பதில் ஏதுவும் வழங்கப்படவில்லை.

எமது கோரிக்கைகள் தொடர்பாகப் பலதரப்பட்ட அமைப்புக்களைச் சந்தித்திருந்தோம். அரச தலைவர் மைத்திரிபாலவைச் சந்தித்தும் மனுக் கையளித்திருந்தோம். அவர் எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவேன் என்று உறுதியளித்திருந்தார். ஆனால் இன்றுவரை எதுவும் நடைபெறவில்லை.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் மனித உரிமைக்கான 40 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. எமது கோரிக்கைகளை மனித உரிமைகள் சபையிலும் முன்வைத்திருந்தோம். அதற்கும் இதுவரை உரிய நடவடிக்கள் எடுக்கப்படவில்லை.

நடைபெறவுள்ள கூட்டத் தொடரிலாவது எமது கோரிக்கைகள் தொடர்பாக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியும், எமது உறவுகளின் விடுதலைக்காகவும் எதிர்வரும் 9ஆம் திகதி அனைவரும் எமது கவனவீர்ப்புப் போராட்டத்தில் இணைந்துகொள்ள வேண்டும். என்றனர். (ற-111)

## சுனாமிப்...

யாழ்ப்பாணத்திலும் நினைவு நாளுக்கான ஏற்பாடுகள் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன. ஆழிப்பேரலையில் உயிரிழந்தர்கள் நாளை காலை 9.05 மணிக்கு நினைவு கூரப்படவுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு உடுத்துறை, கட்டைக்காடு, மணற்காடு ஆகிய பகுதிகளில் ஏற்பாடுகள் முழுமைப்படுத்தப்பட்டுள்ளன என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். உடுத்துறைக் கடற்தொழிலாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் உடுத்துறைசுனாமிபொதுநினைவாலயத்தில் நினைவு நாள் கடைப்பிடிக்கப்படவுள்ளது. காலை 9.05 மணிக்கு சுடர் ஏற்றப்பட்டு உயிரிழந்தவர்கள் நினைவு கூறப்படுவர்.

கட்டைக்காட்டுப் பகுதியிலும் நினைவாலயத்தில் காலை 9.05 மணிக்குச் சுடர்ரேற்றப்பட்டு உறவுகள் அஞ்சலிக்கப்படவுள்ளனர். கப்பலேத்தி மாதா ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மணற்காடு புனித அந்தோனியார் தேவாலயத்தில் காலை 6.30 மணிக்கு பூசை வழிபாடுகள் இடம்பெற்று உறவுகள் அஞ்சலிப்படவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு இதே நாள் ஆழிப்பேரலை இடரால் சில நிமிடங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் காவு கொள்ளப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் அதிகளவான மக்கள் கொல்லப்பட்டிருந்தனர். அதன் நினைவாக உடுத்துறையில் அதிகளவான மக்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் அஞ்சலி நிகழ்வுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21,26)

## எதிர்க்கட்சித்...

விக்கிரமசிங்க மீண்டும் நியமிக்கப்பட்டவுடன் முடிவுக்கு வந்தது. நாடாளுமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை கூடியபோது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டது. எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்சவின் பெயரைப் பிரேரித்தது. சபாநாயகர் கரு ஜயசூரியவும் ஏற்றுக் கொண்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஐக்கிய தேசியக் கட்சியின் சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஆகியோர் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டனர்.

மகிந்த ராஜபக்சவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அவர்கள் கேள்விக்கு உட்படுத்தினர். அமைச்சுப் பொறுப்புக்களை தன் வசம் வைத்துக் கொண்டு, அமைச்சரவையின் தலைவராக மைத்திரிபால சிறிசேன பதவியிலுள்ள நிலையில் அவரது கட்சிக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்க முடியாது என்று அவர்கள் கருத்து வெளியிட்டிருந்தனர்.

அதையடுத்து தனது முடிவை விரைவில் அறிவிப்பேன் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய நாடாளுமன்றில் அறிவித்திருந்தார். இதுவரை அவர் தனது முடிவை அறிவிக்கவில்லை. அதனால் இரா.சம்பந்தனே தற்போதும் எதிர்க்கட்சித் தலைவராகத் தொடர்கின்றார் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில் நேற்று மகிந்த ராஜபக்ச வெள்ள இடர் தொடர்பில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களின் மாவட்டச் செயலர்களுடன் அலைபேசியில் தொடர்புகொண்டு வெள்ள இடர் தொடர்பில் விசாரித்து அறிந்து கொண்டுள்ளார். எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த இதுவரை பதவியேற்காத நிலையில் திடீரென தொலைபேசி அழைப்பெடுத்து தகவல்களைக் கோரியதால் அதிகாரிகள் குழப்பத்துக்குள்ளாகினர் என்று அறியமுடிகின்றது. எதிர்க்கட்சித் தலைவர்களாக இருவர் பெயர் குறிப்பிடப்படுவதால் நாட்டில் தற்போது எதிர் கட்சித் தலைவர் யார் என்பது தொடர்பில் பொதுமக்கள் மத்தியிலும் குழப்ப நிலைமை தோன்றியுள்ளது. (ற-21)

## வெள்ள...

வடக்கு மாகாணத்தில் பெய்த கடும் மழையால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் கடும் பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளன. வெள்ள இடரால் பல்லாயிரக்கணக்கானோர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் அது தொடர்பான விவரங்களை மகிந்த ராஜபக்ச மாவட்டச் செயலர்களிடம் கோரியுள்ளார். மாவட்டச் செயலர்களுடன் நேற்று அலைபேசியில் தொடர்பு கொண்ட அவர் வெள்ள இடரின் பாதிப்புத் தொடர்பில் கேட்டறிந்தார். ஏற்பட்டுள்ள பாதிப்பு மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை தொடர்பிலான விவரங்களைத் தனக்கு அனுப்புங்கள் என்றும் கோரியுள்ளார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டிய உதவிகள் தொடர்பில் விரைவில் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாடி பாதிக்கப்பட்ட மக்களுக்கு முடிந்த உதவிகளைச் செய்வேன் என்றும் அவர் தெரிவித்தார் என்றும் கூறப்பட்டது.

அதேவேளை, வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தலைமையிலான குழுவினர் நேரில் செல்லவுள்ளனர் என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன. (ற-21)

## மாகாணத்...

முடிவடைந்துள்ளது. மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தில் உள்ள சில விடயங்களால் தேர்தல் நடத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தாமதம் ஜனநாயக உரிமை மீறல் என்ற வகையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏதுநிலை தொடர்பான சட்ட நிலமைகள் தொடர்பில் விளக்கம் தர வேண்டும் என்று கோரியே சட்டமா அதிபர் திணைக்களத்துக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தலைமை நீதியரசரின் ஆலோசனையைப் பெறுவதற்கு தேர்தல் ஆணைக்குழு விரும்பியபோதும், முதற்கட்ட நடவடிக்கையாகத் தற்போது சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. அதே வேளை, இந்த விடயம் அனைத்து அரசியல் கட்சிகளின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்படவுள்ளது.

சட்டமா அதிபரின் கவனத்துக்குக்குக் கொண்டு செல்லப்பட்டும் தடங்கல் நீடிக்கும் எனில் அடுத்தகட்டமாக இந்த விடயம் தொடர்பாக உயர் நீதிமன்றை நாடுவது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என்றும் தெரியவருகின்றது. (ற-105)

## பொது...

பெரும்பாலானோரின் நிலைப்பாடு. பொது வேட்பாளர் என்ற பேச்சுக்கே இனி இடமில்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினரான லக்ஸ்மன் கிரியெல்ல.

நேற்றுமுன்தினம் கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த ஒக்ரோபர் மாதம் 26ஆம் திகதி நடைபெற்ற சூழ்ச்சியை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சி துண்டு துண்டாகப் பிளவுப்படுத்தப்படும் என்று சிலர் கனவு கண்டனர். ஆனால் நாம் என்றுமில்லாதவாறு தற்போது பலமடைந்துள்ளோம். அடுத்த அரச தலைவர் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவைக் களமிறக்க வேண்டும் என்று கட்சியில் உள்ள பெரும்பாலானோரின் நிலைப்பாடு. பொது வேட்பாளர் ஒருவரை நாள்கள் இனி ஒருபோதும் களமிறக்க மாட்டோம்.

தற்போது வேட்பாளர் தொடர்பில் பிரச்சினையில்லை. எமது கட்சியில் பல தலைவர்கள் உருவாகிவிட்டனர். ஆனால் எம்முடன் மோதப் போவது யார் என்பது தான் தற்போதுள்ள கேள்வி. தாமரை மொட்டுக் கட்சியா அல்லது சுதந்திரக் கட்சியா என்பதை அவர்கள்தர்ன் தீர்மானிக்க வேண்டும் - என்றார். (ற-10)

## வெள்ள இடர் நிலமை...

இரு மாவட்டச் செயலர்களும், இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர்களும் வெள்ள இடர் மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பாக விளக்கமளித்தனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் விடயங்கள் தொடர்பாகவும், எதிர்காலத் தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இடரால் பாதிப்புக்குள்ளாகி இடைத்தங்கல் முகாம்களில் உள்ளவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா வழங்குவது தொடர்பாகவும், பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபா காப்புறுதி வழங்குவது தொடர்பாகவும் அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

10 ஆயிரம் ரூபா வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்த அமைச்சர், 40 ஆயிரம் ரூபா வழங்குவது தொடர்பாக உரிய அமைச்சுடனும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடப்படும் என்றும் தெரிவித்தார்.

பாதிப்புக்குள்ளான மாணவர்களுக்கு கல்வி அமைச்சின் ஊடாகப் புத்தகங்கள் வழங்கப்படும் என்றும், அப்பியாசக் கொப்பிகள், காலணிகள் வழங்குவது தொடர்பாக உரியவர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இடைத்தங்கல் முகாம்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்த அமைச்சர் அவர்களுடன் கலந்துரையாடினார். உதவிப் பொருள்களையும் வழங்கினார்.

கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராசா, சி.சிறிதரன், சாள்ஸ் நிர்மலநாதன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, சி.சிவமோகன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலர்கள், திணைக்கள அதிகாரிகள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டப்பிரதிப் பொலிஸ்மா அதிபர், இராணுவ அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

தனது பயணம் தொடர்பான அறிக்கை ஒன்றை அமைச்சர் நேற்று மாலை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளார் என்று பொதுநிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலதிக உதவிகள் வழங்க வேண்டும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார் என்றும், அதற்கான தயார்ப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் நிதி அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை வழங்குங்கள் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனியார் துறையினரிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்றும் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற-6,214,35)

# பூநகரி கால்பந்தாட்ட லீக்கின் கால்பந்தாட்ட முடிவுகள் சில

யாழ்ப்பாணம், டிசெ. 25

பூநகரி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான தொடரின் ஆட்டங்கள் முழங்காவில் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு.

சனிக்கிழமை இடம்பெற்ற செந்தாரகை விளையாட்டுக் கழக அணிக்கும் அன்பு ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணிகளும் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் தலா இரு கோல்களைப் பதிவுசெய்தமையால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

கலைமகள் விளையாட்டுக் கழக அணிக்கும் சென். ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணிகளும் தலா மூன்று கோல்களைப் பதிவுசெய்ததை அடுத்து ஆட்டம் சமநிலையில் முடிந்தது. இளந்தளிர் விளையாட்டுக் கழக அணிக்கும் ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி 7:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கலையொளி விளையாட்டுக் கழக அணிக்கும் சென். ஆன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் 6:0 என்ற கோல் கணக்கில் கலையொளி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

இளந்தளிர் விளையாட்டுக் கழக அணிக்கும், ஐயனார் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இளந்தளிர் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)









# தேசியமட்டப் பளுதூக்கல் வடக்குக்கு 9 பதக்கங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 25

இலங்கைப் பளுதூக்கல் சம்மேளனத்தால் நடத்தப்படும் பளுதூக்கல் தொடரில் வடமாகாணத்துக்கு 4 தங்கப் பதக்கங்கள், 2 வெள்ளிப் பதக்கங்கள், 2 வெண்கலப் பதக்கங்கள் என 9 பதக்கங்கள் கிடைத்துள்ளன.


கொழும்பு டொறிங்டன் விளையாட்டு மைதானத்தில் இந்தப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. இளநிலைப் பிரிவில் அபிசா 49 கிலோ எடைபிரிவில் 95 கிலோ பளுவைத்தூக்கி தங்கப்பதக்கம் வென்றார். கே.றஜீனா 71 கிலோ எடைப்பிரிவில் 121 கிலோ பளுவைத் தூக்கி தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்தார். 87 கிலோ எடைப்பிரிவில் மேரி லக்சிகா 101 கிலோ பளுவைத் தூக்கி தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்தார். சுகனியா 81 கிலோ எடைப்பிரிவில் 140 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தை வென்றார்.

இளநிலைப் பிரிவில் விஜிதா 40 கிலோ எடைப்பிரிவில்; 60 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கம் வென்றார். ஆன்பியுலா 55 கிலோ எடைப்பிரிவில் 81 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கம் வென்றார். நிருசா 76 கிலோ எடைப்பிரிவில் 75 கிலோ பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தைச் சுவிகரித்தார்.

மூத்த வயதுப்பிரிவில் சுஸ்மிதாகினி 64 கிலோ எடைப்பிரிவில் 93 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கம் வென்றார். இளநிலைப் பிரிவில் தனுசியா 71 கிலோ எடைப்பிரிவில் 92 கிலோ பளுவைத் தூக்கி வெண்கலப் பதக்கம் வென்றார். (ம-23)







# நியூசிலாந்துக்கு எதிராக சாதிக்குமா இலங்கை?


இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

இலங்கை அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இரண்டாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி மிகச் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தியது. இதனால் நாளை நடைபெறவுள்ள இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை அணியின் பெறுபேறு தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. (ம)

# ரைகர்ஸ் இறுதிக்குள்

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கொலின்ஸ் பிறீமியர் லீக் கால்பந்தாட்ட தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் ரைகர்ஸ் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் கொலின்ஸ் ரைகர்ஸ் அணியை எதிர்த்து கொலின் பிளாஸ் றைடஸ் அணி மோதியது. ஆட்டத்தின் 8ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் ரைகர்ஸ் அணியின் வீரன் டினோஜன் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 12ஆவது நிமிடத்தில் தண்டனை உதை கிடைக்க அதனை மணி கோலாக்கினார். முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது ரைகர்ஸ். இரண்டாவது பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் சம்பியனானது ரைகர்ஸ். (ம-23)





வடக்கு மாகாண கராத்தே சம்மேளனத்தால் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட தொடரில் வெற்றிபெற்ற வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு கிறீன்பீல்ட் சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெற்றது. வடக்கு மாகாண கராத்தே சம்மேளனத் தலைவர் எஸ்.விஜயராஜ் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது. (ம-23)

# இளம் வீரர்கள் டெஸ்ட்டில் ஆர்வம் காட்டுதல் வேண்டும்

## ராவிட் விருப்பம்

இளம் வீரர்கள் டெஸ்ட் ஆட்டங்களில் அதிக ஆர்வத்துடன் செயற்பட வேண்டும் என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வீரர் ராகுல் ராவிட்.

இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார் அவர்.

இளம் வீரர்களுக்கு நான் எப்போதும் சொல்வது என்னவென்றால், டெஸ்ட் கிரிக்கெட்டில் நீங்கள் விளையாடும்போதுதான் சிறப்பான திருப்தியை பெற முடியும். டெஸ்ட் கிரிக்கெட்தான் கடினமான போட்டியாகும். அதில்தான் பல சவால்கள் உள்ளன. 5 நாள்கள் கொண்ட போட்டியில் உங்களது உடல் தகுதி, மனஉறுதி, நுட்பமான ஆட்டம் ஆகியவற்றைப் பரிசோதித்துக் கொள்ளலாம். எனவேதான் அது சவாலானது. உங்களுக்கு சவால் வேண்டும் என்றால் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட வேண்டும். அனைத்து வடிவிலான கிரிக்கெட்டிலும் சிறப்பாக எப்படி விளையாட வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டு விராட் கோக்லி என்று ராவிட் மேலும் தெரிவித்தார். (ம)




## 37 ஆண்டுகள் காத்திருப்பு

# மெல்பேர்ணில் இந்தியா வெற்றிநடை போடுமா?

37 ஆண்டுகளாக மெல்பேர்ண் மைதானத்தில் இந்திய அணி ஆஸ்திரேலிய அணியை வெற்றிபெறவில்லை. இதனால் இந்திய அணியின் 37 ஆண்டுகால காத்திருப்பு நாளை ஆட்டத்தில் முடிவுக்கு வருமா என்பது தொடர்பில் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இரண்டு ஆட்டங்கள் முடிவடைந்துள்ளன. இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றிபெற்றுள்ளன. இத்தகைய பரபரப்பான பின்னணியில் மூன்றாவது ஆட்டம் நாளை ஆரம்பமாகிறது.

நாளை ஆட்டம் மெல்பேர்ண் மைதானத்தில் ஆரம்பமாகிறது. 90 ஆயிரம் ரசிகர்கள் அமரக்கூடிய இந்த மைதானமே உலகின் ஆகப்பெரிய மைதானமாகக் காணப்படுகிறது. இந்த மைதானத்தில் முதலாவது டெஸ்ட் ஆட்டம் 1877ஆம் ஆண்டு நடைபெற்றது. இந்திய அணி 12 ஆட்டங்களை மெல்பேர்ணில் விளையாடியுள்ளது. இவற்றில் இரண்டு ஆட்டங்களில் மட்டுமே வெற்றிபெற்றது. 1981ஆம் ஆண்டு கவாஸ்கரின் தலைமையில் இறுதியாக இந்திய அணி மெல்பேர்ண் டெஸ்டில் வெற்றிபெற்றது. இதன் பின்னர் கபில் தேவ், கங்குலி, ராவிட், கும்ளே, டோனி என்ற பலரின் தலைமையின் கீழ் முயன்ற போதிலும் இந்திய அணி வெற்றிபெறவில்லை. இத்தகைய தொரு பின்னணியில் நாளைய ஆட்டத்தின் மீது பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

# பேர்த் ஆடுகளம் சராசரியானதா!

## பன்னாட்டுக் கிரிக்கெட் சபையினது கருத்துக்கு சச்சின், ஸ்ராக் கண்டனம்



இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஆட்டம் நடைபெற்ற பேர்த் ஆடுகளம் சராசரியான ஆடுகளம் என்று பன்னாட்டுக் கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) தெரிவித்திருந்த நிலையில் இந்தக் கருத்துக்கு சச்சின், ஸ்ராக் ஆகியோர் தமது கண்டனங்களைப் பதிவுசெய்தனர்.

ஒவ்வொரு டெஸ்ட் ஆட்டம் முடிந்ததும் அந்த ஆடுகளத்தின் தன்மை எப்படி இருந்தது என்று பன்னாட்டு கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) சொல்வது வழக்கம். இதன்படி இந்தியா - ஆஸ்திரேலியா இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் நடந்த பேர்த் ஆடுகளம் குறித்து பெரிய அளவில் திருப்தி அடையாத ஐ.சி.சி. இந்த ஆடுகளத்தைச் 'சராசரியான ஆடுகளம்' என்று தெரிவித்திருந்தது.

இது தொடர்பாக சச்சின் தனது கீச்சகத்தில், 'டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆடுகளங்கள்தான் முக்கிய பங்கு வகிக்கின்றன. டெஸ்ட் கிரிக்கெட்டை மேம்படுத்தவும், சுவாரஸ்யத்தை உருவாக்கவும் பேர்த் போன்ற ஆடுகளங்கள் தான் தேவையாகும். துடுப் பாட்டக்காரர்கள் மற்றும் பந்து வீச்சாளர்களின் உண்மையான திறமையை சோதித்து பார்க்கக்கூடிய ஆடுகளமாக அது அமைந்தது. அதனால் இதை சராசரி ஆடுகளம் என்று சொல்வது சரியானது அல்ல' என்று சச்சின் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் மிச்செல் ஸ்ராக் தனது கீச்சகத்தில், 'பேர்த் ஆடுகளம் சராசரியானது என்று ஐ.சி.சி. தெரிவித்திருப்பது ஏமாற்றமளிக்கிறது. இந்தியாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் இடையேயான சிறந்த ஆட்டமாக அது இருந்தது. பந்துக்கும், துடுப்பு மட்டைக்கும் இடையே நடந்த மிகப்பெரிய போராட்டமாக பேர்த் ஆட்டம் அமைந்தது - என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஜடேயாவா அஸ்வினா?

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நாளை ஆரம்பமாகும் மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியில் அஸ்வின் அல்லது ஜடேயா ஆகியோரில் ஒருவர் நிச்சயம் இடம்பெற அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்று கருதப்படுகிறது.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் அஸ்வின் விளையாடினார். அவர் மிகச் சிறந்த பந்துவீச்சை வெளிப்படுத்தினார். அந்த ஆட்டத்தில் அவர் காயமடைந்ததை அடுத்து இரண்டாவது ஆட்டத்தில் அஸ்வின் விளையாடவில்லை. பதில் வீரராக ஜடேய்ாவும் சேர்க்கப்படவில்லை. இந்திய அணி இரண்டாவது ஆட்டத்தில் தோல்வியடைந்தமைக்கு இதுவும் ஒரு காரணம் என்று தற்போது பேசப்பட்டுவரும் நிலையில் நாளை ஆரம்பமாகும் மூன்றாவது ஆட்டத்தில் அஸ்வின் ஜடேயா ஆகியோரில் ஒருவர் நிச்சயம் சேர்க்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன என்று கருதப்படுகிறது. (ம)





## புவனேஸ்வர் குமார் களமிறங்க வாய்ப்பு

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் புவனேஸ்வர் குமார் களமிறங்க வாய்ப்புண்டு என்று கருதப்படுகிறது.

கடந்த இரண்டு ஆட்டங்களில் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் புவனேஸ்வர் குமார் இடம்பெறவில்லை. ஆஸ்திரேலிய ஆடுகளங்களில் அணியின் வெற்றிக்கு அவர் முக்கிய துருப்புச் சீட்டாக இருப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவருக்கு அணியில் இடம் கொடுக்கப்படாமை விமர்சனங்களைத் தோற்றுவித்திருந்த நிலையில் நாளை புவனேஸ்வர் குமார் களமிறக்கப்படலாம். உமேஸ் யாதவ் நீக்கப்படலாம் என்று கருதப்படுகிறது. (ம)

# ஆஸ்திரேலியாவினது இணைத் தலைவராக ஏழு வயதுச் சிறுவன்

ஆஸ்திரேலிய அணியின் இணைத் தலைவராக ஏழு வயதுச் சிறுவன் நியமிக்கப்பட்டான். ஆர்ச்சி சில்லர் என்ற குறித்த சிறுவன் இதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளான். அவனின் ஆசையை நிறைவேற்றும் பொருட்டே ஆஸ்திரேலிய அணி அவனை இணைத் தலைவராக நியமித்தது.

ஆர்ச்சி சில்லர் அரிய வகை இதய நோயால் பாதிக்கப்பட்டுள்ளான். இதுவரை பல அறுவைச் சிகிச்சைகளை அவன் சந்தித்துள்ளான். அவனின் மிகப்பெரிய ஆசை. அவனின் விருப்பத்தை சில்லரின் தந்தை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து அவன் ஆஸ்திரேலிய அணியின் இணைத் தலைவராக நியமிக்கப்பட்டான். (ம)



A/L PHYSICS
A/L
எல்லா Batches இற்கும்
திரு. M. ஸ்பெல்மன் BSc, PGDE
தொடர்பு - 077 6116724

தேவை
நான்கு வயதுடைய சிறுமிக்கு பாடசாலையில் கொடுக்கும் பயிற்சியை வீட்டில் மீண்டும் செய்துகாட்டவும் ஓரளவு படித்த 35 வயதுக்கு உட்பட்ட பெண்பிள்ளை வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது.
சம்பளம் பேசி தீர்மானிக்கலாம்.
தொடர்பு - 077 566 9785
CS 32068/15/18

அறிவித்தல்
அதிபர் சேவை கிரகித்தல் வகுப்பு
புதன், வியாழன்
பி.ப. 5.00 - 7.30 வரை
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவில் நடைபெறும்.

Galaxy Star
வெற்றி வாரம் 283 / திகதி 23.12.2018
வெற்றி இலக்கங்கள்
06 11 18 23 47
அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி
ரூ. 2,827,252/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS எனை டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1529
சீட்டிழுப்பு திகதி 24.12.2018
வெற்றி இலக்கங்கள்
10 25 28 57 C
அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட்
ரூ 23,449,932/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3126 திகதி: 2018.12.24 திங்கட்கிழமை
SATURDAY FORTUNE
நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து / போனஸ் இலக்கம் / அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
04 08 37 49 H 19 56,099,730/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 474
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.12.24
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 53,900,075/-
வெற்றி இலக்கங்கள்
07 25 32 53 V
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AX என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
O/L எழுதியோர், இளைஞர் யுவதிகள், மாணவர்களுக்கான 3 மாத உரையாடல் மூலமான ஆங்கிலப்பயிற்சிநெறி.
ஆங்கிலத்தில் ஓரெழுத்துத்தெரியாதவர்களும் தமிழ்போல சரளமாக மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம்பேசமுடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 05.01.2019 சனி
1. காலை : 08-10 3.மதியம் : 01-03
2. காலை : 10-12 4.மாலை : 03-05
ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்.
31.12.2018 வரை பதிவுசெய்வோருக்கு 16 பாடப்புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் முற்றிலும் இலவசம்.
3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியுமென நிரூபிக்கப்பட்ட பாடநெறி
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்.
077 621 4567 222 4282

கடை விற்பனைக்கு
யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில்
மானிப்பாய் "LB ∴ பினான்ஸ்" இற்கு முன்னால்
மூன்று கடைத் தொகுதிகளைக் கொண்ட
இரு மாடிக்கட்டடம்
உடன் விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு - 077 2315521



# ஆஸி. ரென்னிஸ் தொடரை இலக்கு வைக்கிறார் நடால்

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற பகிரங்கத் தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலியப் பகிரங்கத் தொடர் ஜனவரி மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்தத் தொடரில் கிண்ணம் வெல்லும் நம்பிக்கையை வெளிப்படுத்தினார் நடால்.

பன்னாட்டு அந்தஸ்துபெற்ற பகிரங்கத் தொடர்களாக நான்கு தொடர்கள் உள்ளன. ஆஸ்திரேலியப் பகிரங்கத் தொடர், அமெரிக்கப் பகிரங்கத் தொடர், விம்பிள்டன் தொடர், பிரென்ஞ் தொடர் என்பனவே அந்தப் பகிரங்கத் தொடர்களாகும். ஆஸ்திரேலியப் பகிரங்கத் தொடர்தான் ஒரு வருடத்தில் நடைபெறும் முதலாவது பகிரங்கத் தொடராக அமைந்துள்ளது. அந்த வகையில் அடுத்த வருடத்துக்கான ஆஸ்திரேலியப் பகிரங்கத் தொடர் ஜனவரி மாதம் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. ஜனவரி மாதம் 27ஆம் திகதி வரையில் இந்தத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் நடால்.

"ஆஸ்திரேலியத் தொடரில் கிண்ணம் வெல்வேன் என்ற நம்பிக்கை உள்ளது. 2019ஆம் ஆண்டின் இரண்டு பன்னாட்டுப் பகிரங்கத் தொடர்களை இலக்கு வைத்துள்ளேன்'' என்று நடால் மேலும் தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களாகத் தொடர்ந்து காயத்தால் அவதிப்பட்டுவந்த நடால் அண்மையிலேயே உடற்தகுதி பெற்றார். எனினும் சில ஊடகங்கள் அவர் இன்னும் உடற்தகுதி பெறவில்லை என்று குறிப்பிட்டுள்ளன. (ம)

# ரி-20 அணியில் மீண்டும் டோனி

இந்திய ரி-20 அணியில் டோனிக்கு மீண்டும் இடம்கொடுக்கப்பட்டது. இதனால் அவரின் ரி-20 வாழ்க்கை முடிவுக்கு வந்தது என்ற விமர்சனத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடருக்கான அணியில் இருந்து டோனி நீக்கப்பட்டிருந்தார். இதனால் 2020ஆம் ஆண்டு ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் டோனி விளையாடமாட்டார். இந்தத் தொடருக்கு சிறந்த அணியைக் கட்டமைக்கும் நோக்கிலேயே டோனி நீக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் ஆஸ்திரேலியத் தொடரின் பின்னர் நடைபெறவுள்ள நியூசிலாந்துக்கு எதிரான ரி20 தொடருக்கான அணியில் டோனிக்கு இடம் கொடுக்கப்பட்டது. (ம)





கிறிஸ்மஸ் தினத்துக்கு அடுத்த நாள் ஆரம்மாகும் டெஸ்ட் ஆட்டங்கள் பொக்சிங் டே டெஸ்ட் ஆட்டங்கள் என்று அழைக்கப்படுகின்றன. கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இந்த ஆட்டம் அமைகின்றன. இந்த வருடத்தில் இரண்டு பொக்சிங் டே ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. நியூசிலாந்து இலங்கை, இந்தியா - ஆஸ்திரேலியா இடையிலான ஆட்டங்களே அவை. பொக்சிங் டே ஆட்டத்துக்கு இந்திய அணியை வரவேற்கும் வகையில் மகாத்மா காந்தியின் உருவப்படங்கள் மெல்பேர்ண் நகரின் சில இடங்களில் வரையப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.12.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.